காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

14—11—71

★

உள்ளே......

தூங்குலி விவகாரமும் பூணூல் ஏடுகள் போக்கும்
(தலையங்கம்)

மழுப்பத்தான் தெரியுமா உங்களுக்கு?
(அப்போலோ)

எரிவதை இழுத்தால்?
(உணர்ச்சிக் கட்டுரை)

தியாகத்தில் பூத்த மலர்
(சிறப்புக் கட்டுரை)

சோழமாதேவி
(தொடர்கதை)

விலை 20 காசு



1—11—71 அன்று அண்ணா பிறந்த நாள் விழாவில் பெங்களூரில் அண்ணியார் அவர்களுக்கு முதல்வர் வீரேந்திரபாடில் அவர்கள் பொன்னாடை போர்த்தினர்கள்

மழுப்பத்தான் தெரியுமா உங்களுக்கு?

வெகு நாட்களாகவே மிஸ்டர் அப்போலோவுக்கு ஆசை, செஞ்சீனாவுக்குப் போய்வர வேண்டும் என்று. அதுவும் ஐ. நா.விலிருந்து சியாங்கேஷேக்கை வெளியேற்றிவிட்டு, அந்த இடத்தில் மாசேதுங்கை உட்காரவைத்த பிறகு, மாவைப் பேட்டி காண்பதில் ஒரு தனி ஆர்வமே ஏற்பட்டது அவருக்கு! "செஞ்சீனாவுக்கு!" என்று எண்ணிக் கொண்டதுமே, அவர், அடுத்த வினாடி, மாவின் முன்னால் போய் நின்றார், கம்பீரமாக!

உரோமம் நிரம்பிய புருவத்தை ஒருமுறை மேலும் கீழும் தாழ்த்தி உயர்த்தி ஏறிட்டுப் பார்த்தபின்பு, "யூ இண்டியன்?" என்றார் புன்முறுவலுடன் மா.

பதிலுக்குத் தானும் முறுவலித்துவிட்டு, தன்னை 'விசிட்டிங்கார்டு' மூலம் அறிமுகம் செய்துகொண்டார் அப்போலோ.

எடுத்த எடுப்பிலேயே விஷயத்துக்கு வந்துவிட்டார் அப்போலோ. "மிஸ்டர் மா! உங்களால் எப்படி, அந்த ஐ. நா. புகழ் நாய் புட்டோவின் முகத்தில் கரிபூசி அனுப்ப முடிந்தது?" என்றார். தொடர்ந்து "ஒருகால் யாகியாகானே வந்திருந்தால் நீங்கள் பாகிஸ்தானுக்கு முழு ஆதரவையும் தெரிவித்திருப்பீர்களோ?" என்றார்.

மாசேதுங்குக்குச் சற்று சங்கடமாகத்தானிருந்தது. "நீங்கள் இலண்டன் பத்திரிகையான "இலண்டன் டைம்ஸ்" படித்துவிட்டு வருகிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்றார் மா.

"ஆமாம்! எனக்கு உங்கள் விடை தேவை" என்றார் அப்போலோ.

எந்தப் பதிலைச் சொல்வது என்பதுபற்றிச் சற்றே யோசித்தார். தனது வெளி விவகாரத் துறை அமைச்சரான சி-பெங்-பெயின் பேச்சைக் குறித்து முதலில் ஒரு விளக்கமளித்துவிட விரும்பினார் மா.

"மிஸ்டர் அப்போலோ! எங்கள் அமைச்சர் ஒருவர், 'பாகிஸ்தானுக்கு தொடர்ந்து எங்களது ஆதரவு இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்த ஆதரவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்று விளக்கம் தராததனால் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. அந்தக் குழப்பம் காரணமாகவே புட்டோவும், எங்களை முழுமையாக நம்பிவிட்டார் என்றே தோன்றுகிறது. நான் சொல்வது, நாங்கள் 1965-இல், இந்தியாமீது எந்த அளவுக்கு மனநிலையில் இருந்தோமோ, அதிலிருந்து நிறைந்த மாற்றங்களைக் கொண்டிருக்கிறோம்! அதாவது இப்போது நாங்கள் சில உண்மைகளை உணர்ந்திருக்கிறோம்..."

மாசேதுங் முடிப்பதற்குள்ளாகக் குறுக்கிட்டு, மிஸ்டர் அப்போலோ, "அவ்வாறு உணரும்படியாக கிழக்கு வங்காளத்திலுள்ள தங்கள் ஆதரவு கம்யூனிஸ்டுக் கட்சியினர் நிர்ப்பந்தித்து விட்டார்களா?" என்றார்.

மிஸ்டர் அப்போலோவின் அரசியல் பேட்டி!

"நாங்கள் யாருடைய நிர்ப்பந்தத்துக்கும், பணியமாட்டோம் என்பது தெரியாதா என்ன? கிழக்கு வங்காளத்தில் எங்கள் ஆதரவு கம்யூனிஸ்டுகள், போராட்டத்தை ஆதரித்துக் கொண்டிருப்பதுடன், யாகியாவுக்கு எதிரான ஆதரவையும் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், நாங்கள் அந்த அரசியலைப் புரிந்துகொள்ளாமல் இருப்போமா?" என்றார் மா.

"நல்லது. கிழக்கு வங்க கம்யூனிஸ்டுகளது ஆதரவு, அவாமி லீகின் போராட்டத்துக்கு இருக்கிறது; அத்துடன் அந்தக் கம்யூனிஸ்டுகள் நேரடி நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள் என்பதனால்தான், இப்போது புட்டோ ஏமாற்றத்துடன் திரும்பி இருக்கிறார் என்று நான் கருதலாமா?"

"அதெப்படிச் சொல்லிவிட முடியும்! எங்களுக்கு அரசியல் ஞானமில்லை என்பதல்லவா — நீங்கள் சொல்கிறபடி பொருளாகும்! நாங்கள் நிலைமைகளை உணர்கிறோம்!"

"அப்படியானால், ஒரு வேளை, பாகிஸ்தான் போர் தொடுக்குமானால், நீங்களும் இன்னொரு பக்கத்திலிருந்து இந்தியாவைத் தாக்க மாட்டீர்கள் இல்லையா!"

மா பதில் சொல்லவில்லை. சிரித்துக் கொண்டார்.

"அது சரி! பாகிஸ்தானில், வங்காளதேஷ் போராட்டம் காரணமாக, உள் நாடுகள் பலவற்றில் மக்களே இல்லை; பல கிராமங்கள் எரிக்கப்பட்டுப் போயிருக்கிறது. போக்குவரத்துக்கூட பாதிக்கும் வகையில் பாலங்கள், இரயில் பாதைகள் தகர்க்கப்பட்டிருக்கின்றன; என்றாலும் பாகிஸ்தான், ஒரு பெரும் போரை நடத்தும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"எனக்கு மிஸ்டர் யாகியாவைத் தெரியும். அவர் ஒரு இராணுவத் தளபதி அல்லவா! எந்த நேரத்தில் எதனை எப்படிச் செய்யவேண்டும் என்பதை அவர் அறிவார்!"

"ஆக, ஒரு போர் நடக்காது; வெறும் மிரட்டல்தான் என்பது உங்கள் மதிப்பீடா?"

பதில் சொல்லவில்லை மாசேதுங்.

"சரி, உங்களிடம் காணப்படும் இந்தப் போக்கு ஒரு பெரிய அரசியல் மாறுதல் என்றே அரசியல் விமர்சகர்கள் கருத்தறிவிக்கிறார்கள். இதற்குக் காரணம் உங்களுக்கு ஐ நா.வில் இடம் தந்ததுதானா?"

மீண்டும் ஒரு புன்முறுவல்தான் மாவிடமிருந்து!

"ஆக, நீங்கள் எதையும் மழுப்பத்தான் விரும்புகிறீர்கள்? உண்மைகளை பளிச்சென எடுத்துக் காட்ட விரும்பவில்லை? அப்படித்தானே!" — என்று கேட்டுக் கொண்டே, தன் பேட்டி இன்றைக்குச் சுவாரஸ்யமாக அமையவில்லையே என்ற வருத்தத்துடன் பறக்கத் தொடங்கினார் அப்போலோ!

—திருவாரூர் முத்துராமன்.



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 14—11—71 | இதழ் 18

கங்குலி விவகாரமும் பூணூல் ஏடுகள் போக்கும்

ரயில்வே போர்டின் தலைவராக இருந்த பி. சி. கங்குலி என்ற வங்காளப் பார்ப்பனருக்காக இந்த நாட்டு பூணூல் பத்திரிகை உலகம் தமது பிரசார பலம் முழுவதையும் செலவழித்து வருவதுடன், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதற் கொப்ப, ரயில்வே அமைச்சர் திரு. அனுமந்தையா அவர்களைப் பற்றி அவர் ஏதோ ஒரு சிறந்த அதிகாரியைப் பழி வாங்கி விட்டதுபோல "கங்காதரா மாண்டாயா?" (செத்த கழுதையை நினைத்து) ஒப்பாரி வைத்தவன் கதை போல நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்!

ரயில்வே போர்டு தலைவர் ஒரு அதிகாரி. ரயில்வே அமைச்சருக்குக் கீழே பணியாற்றி வருபவர் அவரிடம் ஒழுங்கீனம், ஒழுக்கக்கேடு நிர்வாகத் திறமையின்மை, சாதி வெறி போன்ற எந்த தவறு களைக் கண்டாலும், அவரை வெளியே அனுப்புவ தற்கு முழு அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளான அமைச்சர்கட்கு உண்டு என்பதைச் சுட்டிக் காட்டி, அசல் அடங்காப் பிடாரியாக நடந்துகொண்ட அந்தப் பார்ப்பன அதிகாரிமீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து வீட்டுக்கு அனுப்பவேண்டும்.

கேரள முதல்வர் திரு. அச்சுதமேனன் அவர்கள் மிகவும் தெளிவாகவும், துணிவாகவும் இத்தகைய அடங்காப்பிடாரி அதிகாரிகளின் போக்கைக் கண்டித் துக் கூறினார்!

பூணூல் பாசம் ரத்தபாசத்தை விடக் கடுமை யானது, கொடுமையானது என்பதற்கு அடையாள மாக இந்த அடங்காப்பிடாரியான பூணூல் அதி காரியை உலகிலேயே உள்ள மிகுந்த திறமைசாலி என்றும் இவரை அனுப்பிவிட்டதால் இந்த தேசமே இருளடைந்துவிட்டது என்பது போலவும் கட்டுப் பாடாக எழுதுகின்றனர்!

திரு. கங்குலி ரயில் பெட்டியிலிருந்து இறங்கி வர மறுத்தார்; பிறகு கட்டாய ஓய்வு பெறும் ஜனாதி பதி கையெழுத்திட்ட உத்தரவை வாங்க மறுத்தார். பிறகு இன்னமும் நானேதான் ரயில்வே போர்டு தலைவன் என்று அறிவித்துக் கொண்டது. இந்த ஆணைக்குப் பின் பல நாட்களாயும் முறைப்படி, அவருடைய பைல்களையும், அலமாரி முதலிய அரசாங்கச் சொத்துக்களையும், இவருடைய இடத் திற்கு வந்தவரிடம் இவர் ஒப்படைக்க மறுத்ததும் அதன் காரணமாக டில்லி மாஜிஸ்திரேட் முன்னிலை யில், ஐந்து சாட்சிகளுடன் இவரது அலமாரிகளை உடைத்து, அவற்றிலிருந்த ரிக்கார்டுகளை இலாகா வினர் எடுக்கவேண்டிய சூழ்நிலை—இவை அனைத்தும் அவரது தான்தோன்றித்தனத்திற்கும் கீழ்ப்படியா மைக்கும் சரியான எடுத்துக்காட்டுகள் அல்லவா?

இதில் 100ல் ஒரு பங்கு அல்லது பத்தில் ஒரு பங்கு ஒரு பார்ப்பன அதிகாரியிடம் ஒரு பார்ப்பன ரல்லாத கீழ்ப் பணியாளர் நடந்துகொண்டால் இங்குள்ள கங்குலிக்காக கசிந்துருகி கண்ணீர் விடும் அக்கிரகார முதலைகளும் அவாள் ஏடுகளும் அப்போது இதே நிலையை (Stand) எடுப்பார்களா?

கங்குலி நாணயம் உள்ள அதிகாரிகூட அல்ல என்பதற்கு நடப்புகளே தகுந்த சாட்சியமாக இருக் கின்றன. பூட்டப்பட்டிருந்த அவரது அலுவலக அலமாரிகளில் என்ன இருக்கிறது என்று நிருபர் கேட்டபோது, அதில் சில தஸ்தாவேஜுகளும் கொஞ்சம் சொந்தப் பணமும் இருக்கிறது என்று பதிலளித்துள்ளதாகப் பத்திரிகைகளில் சில நாட் களுக்கு முன்வந்தது.

நேற்றையதினம் அலமாரியின் பூட்டு உடைக்கப் பட்டு அதிலுள்ளவைகளை மாஜிஸ்திரேட் முன்னிலை யிலும் சாட்சிகளுடன் இருப்பு எடுக்கப்பட்டதில் (Inventory) அதில் பணமே இருக்கவில்லை இவர் எவ்வளவு மகா நாணயஸ்தர் என்பதற்கு இது ஒரு உதாரணம் போதாதா?

பார்ப்பான் நினைத்தால் மலையை மடுவாக்கு வான்; மடுவை மலையாக்குவான்; அது அவாள் விளம்பரக் கலையின் தனிச் சக்தி என்பதற்கு உதா ரணம் போதாதா?

கோயங்காவின் தமிழ் வார ஏடு ஒன்றில் 'கங்கு லியா? காங்கி கூலியா?' என்று எழுதி அவரை மகா மேதாவி கெட்டிக்காரர் என்று எழுதி அவர் ஒரு காங்கி கூலியைப்போல நடத்தப்பட்டதாக ஆயாசப் பட்டிருக்கிறது!

ஒரு காங்கிக் கூலிக்குள்ள நேர்மையும், ரோஷ மான உணர்வும் இந்த மகா மகா மேதையான கங்கு லிக்கு இல்லையே.

"பத்து கங்குலிகள் இருந்தால் போதும் இந்தி யாவையே மாற்றிவிடலாம்" என்று முன்பு டி. டி. கே. சொன்னாராம்.

டி. டி. கே. என்னும் கிருஷ்ணமாச்சாரி முதுகில் பூணூல் தொங்காமல் இருந்தால் இந்தப் பேச்சு அவர் வாயில் வருமா? முந்திரா புகழ் அவர் தன் சாதிக்காரனுக்கு இவ்வளவு பாராட்டு அளித்ததில் ஆச்சரியமென்ன?

கங்குலி பார்ப்பனராக இல்லாமல் வேறு ஆளாக இருந்திருந்தால் டி.டி.கே. அப்படி புகழ்ந்திருப்பாரா!

ஐந்து பேரையும் அனுபவித்து ஆறுவது ஒருவர் மீதும் ஆசைப்பட்ட திரௌபதியை "அழியாத பத்தினி"யாக்கிய பார்ப்பனப் பிரசார இயந்திரங் களின் தந்திரம், அடங்காப்பிடாரி கங்குலியை, சாதி வெறியர் கங்குலியை நாணயக்கேடரான கங்குலியை அதிமேதாவி யாக்கியதில் அதிசயம்தான் என்ன?

பார்ப்பனர் யார்? பார்ப்பனப் பத்திரிகைகளின் சக்தி என்னவென்று தெரியவேண்டுமா? அப்படி யானால் கங்குலி விவகாரத்தையும், அதற்கு வக்கா லத்து வாங்கிய அவாள் ஏடுகளையும் ஒருமுறை படித் தால் மரமண்டைகளுக்குக்கூட விளங்கும்.

பூணூல் பக்தியின் சக்தியே அலாதியானது தான்! இல்லையா?

[நன்றி. "விடுதலை."]

ஓ! என் தலைவனே!

ஓ! என் தலைவனே!

நின்று நிலவும் புகழொளியை என்றும் பரப்பிடும் பகுத்தறிவுப் பகலவனே!

உன் சுடர்கள் முதுகெலும்பில்லாத சாதி சமயவாதப் புழுக்களைச் சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றன;

உன்னுடைய வெயில்—

மூட நம்பிக்கைச் சிரங்கைப் போக்கும் மாமருந்து.

உன்னுடைய கதிர்கள் தன்மதிப் பாளனுக்குச் சுறுசுறுப்பை நல்குகின்றன;

அவனை அறியாமை இருளிலிருந்து காக்கின்றன.

எனவே உன்னை வணங்குகின்றேன்; உன் பிறப்பிடம் நோக்கி மண்டியிட்டு உன் சிறப்பினைப் பாடுகின்றேன்.

ஓ! என் தலைவனே!

ருசியா இலெனினைப் பெற்றது எகிப்து நாசரைப் பெற்றது. அயர்லாந்து டிசுரேலியைப் பெற்றது அமெரிக்கா வாசிங்டனைப் பெற்றது. நாங்கள் உன்னைப்பெற்றோம்.

வாசிங்டன்-எழில் குலுங்க எழுதத் தெரியாதவன்.

இலெனின்—

அடுக்கு நடைமிடுக்கில் பேசத் தெரியாதன். நாசர்-அன்பு வழியால் உள்ளங்களை ஆளத் தெரியாதவன். டிசுரேலி—

குடும்பப் பிணைப்பால் தொண்டர்களை இணைக்கத் தெரியாதவன்.

நீயோ—

எல்லாம் தெரிந்தவன்.

எனவே உன்னை வணங்குகின்றேன்; உன் பிறப்பிடம் நோக்கி மண்டியிட்டு உன் சிறப்பினைப் பாடுகின்றேன்;

ஓ! காஞ்சிபுரத்துக் கதிரவனே!

அன்னைத் தமிழகத்தின் அடிமை இரவுகள் அகற்றிடற்குத்தோன்றினாய் நீ!

காரிருளை நீக்கிடற்குக் காலைப் பொழுது அளித்தாய் நீ!

— இ. மறைமலை —

சோம்பேறித் தமிழன் வைகறையில் துயிலெழுந்தானா?...

அடக்குமுறை மேகங்கள் மறைக்கப் பார்த்தன உன்னை? முடிந்ததா?

சிறைவாசம் என்ற இராகு தடைச் சட்டம் என்ற கேது உன்னை விழுங்கி விட நினைத்தன.

ஆனாலும்...

மெல்ல மெல்ல மேலெழுந்தாய். உச்சி வானில் தோன்றினாய். தூங்கி வந்த தமிழரினம் துடி துடித்து எழுந்தது!

ஏங்கி நின்ற தமிழன்னை இன்பப் பெருமூச்சு விட்டாள்;

மருள்படிந்த சேரிப்புறம் உன் அருள் படிந்த பின்னர் தான் இருள் மடிந்து ஒளி பொலிந்து பொருள் விளங்கத் தொடங்கியது.

ஆனாலும்...

அந்த மாலைப் பொழுது ஏன் வந்தது;

நீ உதித்த இடம் ஈரோடு;

உன்னால் கிழ்த்திசையே பொலிவுற்றுச் சிறந்தபொழுது—

நீ ஏன் மேற்றிசைக்குச் சென்றாய்?

சென்னைக் கடற்கரையில் உன்னை ஏன் மறைத்துக் கொண்டாய்.

மாலைப் பொழுதை ஏன் கொடுத்தாய்?

ஓ என் தலைவனே!

உன்னால் வாழ்ந்தவர் ஆயிரம் பேர்!

உன்னை வாழ்த்துவோர் நூறாயிரம்பேர்!

கண்ணை மறைத்துச் சென்றாயே!

கங்குலில் மூழ்கவிட்டாயே!

நீ தோன்றுவதற்கு முன்னால் "ஒளி" என்றால் என்ன என யாருக்கும் தெரியாது; எனவே "இருள்" பற்றி யாருக்கும் கவலையும் இருந்ததில்லை;

நீ தோன்றினாய்;

ஒளியைக் காட்டினாய்;

உன் ஒளியைப் பார்த்தபின் தான் இருளை நாங்கள் உணர்ந்தோம்

மீண்டும் இருளில் மூழ்க வைத்தது ஏன்?

ஆனாலும்...

உன் ஒளியை வாங்கி திருவாரூர்த் திங்கள் எமக்கு வழியைக் காட்டுகின்றது

எனவே உன்னை வணங்குகின்றேன்; உன் பிறப்பிடம் நோக்கி உன்சிறப்பினைப் பாடுகின்றேன். ஃ

61 வருட அனுபவ பிரசித்திப் பெற்ற
பரங்கிப்பேட்டை
வைத்தியம்
சென்னையில்
நேரில் சிகிச்சை பெறலாம்.
ஆலோசனைக்கு:
ஹக்கீம்
M. M. முஸ்தபா, R.M.P.
சித்த ஆயுர்வேத யூனானி முறை ஜனநேந்திரிய சாஸ்த்திரத்தில் அதிக அனுபவம் உள்ளவர்.

சகலவித சர்ம நோய், ஸ்கலிதம், ஆண்மை குறைவு, நரம்புத் தளர்ச்சி, பெண்களின் மாதவலி, வெள்ளை படுதல், நீரழிவு வாதம், ரத்தக் கொதிப்பு, மூலம், மற்றும் பல நோய்களுக்கு கைதேர்ந்த சிகிச்சை பெறலாம்.
நோய் விபரம் எழுதி V.P.P. மூலம் மருந்து பெறலாம்.
முகம்மதியா வைத்தியசாலை
[டிரஸ்ட்]
130, பிராட்வே, சென்னை-1.
போன்: 23643
H.O. பரங்கிப்பேட்டை, தென் ஆற்காடு ஜில்லா.

சோழமாதேவி

ராஜமணாளன்

[31]

எல்லாமே வீண்தானா?

முதலமைச்சர் முத்துமுடியாரால், கொல்லன் அழிசி என்ற கேரளப் புலவரும், அவருடன் வந்த இளம்பெண்ணும், விருந்தினர் மாளிகையில் தங்கி இருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டு, ஒரு கிழமைகள் வரையில், இருட்டு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதைப்போல, மாளிகையையும், அதனைச் சுற்றியுள்ள பூஞ்சோலையையும் சுற்றிச் சுற்றி அலுத்துப்போன பின்பு, வந்திருந்த இளம்பெண்ணுக்கு, அந்த கலவரம் மிகுந்த அமைதிக்கிடையே, நாட்களைக் கழிப்பது மிகச் சிரமமாக இருந்தது.

கேரளப் புலவரான அவர், மன்னர் மனுநீதியின் பேரன்புக்கு எப்படிப் பாத்திரரானார் என்பது கொல்லன் அழிசிக்கே மறந்துவிட்டது. அதுபோலவே கேரளாவிலிருந்து நீண்ட நெடுந்தூரத்தைக் கடந்து கருவூரை யடைந்து அங்கே ஒரு வணிகர் இல்லத்தில், சில நாட்கள் தங்கி இருந்தபோது, தங்கி இருந்த இல்லத்துக்கு விருந்தினராக வந்துவிட்டுப் போன யாரோ ஒருத்தி மூன்று வயதுச் சிறுமியாக 'புலவர்க்குப் பரிசு' என்று இன்றைய இளம்பெண்ணைக் கொடுத்துப் போனதும்கூட மறந்துதான் போய் விட்டது!

நல்ல இளமைப் பருவத்தில் இருந்தார் புலவர் அப்போது. கட்டான காளைப் பருவம் அவருக்குச் சொந்தமாக இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் தான் வேறு, அவள் வேறு என்ற வேறுபாடற்ற தன்மையில் இதயம் ஒன்றிக் கலந்திருந்த அவரது குடும்ப விளக்கு, காலக் கேட்டால் அணைந்து போய்விட்டது.

இயன்றவரையில் கொல்லன் அழிசி, ஒரு இல்லறத் துறவியாக இருந்துவந்தார். அதனால்தானோ என்னவோ, அவருக்குப் பின், அவருடைய சந்ததி என்று பெயரை நிலைநாட்டிக் கொண்டிருக்க ஒரு குழந்தைகூட பிறவாமற் போய்விட்டது.

துணைவியை, பூமித் தாயின் அடிவயிற்றில் போட்டுப் புதைத்துவிட்டபோதுகூட, அந்தக் குறை அழிசியின் மனத்தில் ஒரு வடுவை உண்டாக்கிக் கொண்டிருக்கத்தான் செய்தது!

அவர் ஒரு துறவி! என்று எல்லா தரப்பாராலுமே செல்லமாகச் சொல்லப்படுவதுண்டு. துறவிக்கு வேந்தனும் துரும்பல்லவா! வேந்தன் மட்டுமல்ல; வேல்விழி மாதரின் கடைவீச்சும், குறும்புச் சிரிப்பும் கண்ணொளி பாய்ந்துரைக்கும் கருத்தும்கூட அவருக்கு வேம்பாய்த்தானிருந்தன! அந்த மனத்துக்குச் சொந்தக்காரராக இருந்த அழிசியின் உள்ளத்திலே தான் ஒரு சலனம்! தனக்கும் ஒரு குழந்தையைப் பெற்றுக்கொடுக்கவில்லையே, தன்னோடு வாழ வந்தவள் என்ற குறை!

துணைவி, பூமி புகுந்து புல், பூண்டுகளுக்கு எருவாகிப் போய்விட்ட பிறகும்கூட, அந்தக் குறை அவரது மனதில் கொம்பாகிக் கிளையாகித் தழைத்துக்கொண்டே வந்தது என்றால் யாரால்தான் நம்ப முடியும்?

வணிகர் என்றால், கொள்ளை லாபத்துக்காக மட்டுமே பொருள்களை விற்பனை செய்பவர்கள் என்று ஒரு பொருளும் இருப்பதாக அன்றைக்கு யாருக்கும் தெரியாது. வாணிபம் என்பது ஒரு பொதுத் தொண்டு என்று கருதுபவர்களே விற்பனைக் களங்கள் அமைத்துக்கொண்டு, பண்டங்களைப் பதுக்காமல், கொள் முதல் விலைக்குக் கட்டுப்படி இனங்களைச் சேர்த்து குறைந்த விலைக்குப் போட்டி போட்டுக் கொண்டு விற்ற நாள் அது.

புலவர்கள் பாடி அதனால் புகழப்பட்டதுபோல, மன்னர்களது நல்லாட்சி காரணமாக இசை மேம்படுத்தப் பட்டதுபோல, பெண்டிரின் கற்பு, புகழைத் தேடிக் கொடுப்பதைப்போல நாணயமான—நம்பிக்கையான பண்ட விற்பனைகளும் அந்தக் காலத்தில் சில வணிகர்களுக்குப் பேரையும் புகழையும், செல்வத்தையும் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருந்தது.

கருவூரில் அழிசி தங்கியிருந்த வணிகர் வீடு, அப்படிப் புகழுக்குரிய ஒரு வீடு. இனிப்பு இருக்குமிடம் அதுதான்! போ அங்கே என்று எவரும் ஈக்களுக்குச் சொல்லவேண்டிய தில்லையே!

புலவரைப்போல எத்தனையோ பேர்! எத்தனையோ வகையான காரணங்களுக்காக! அங்கே வந்து தங்குவார்கள்! போவார்கள்!!

அந்த பெண்ணும் ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் அங்கே வந்து தங்கி இருந்தாள், கையில் மூன்று வயதுப் பெண் குழந்தையோடு.

துடிப்பாக, மழமழப்பாக, வெடுவெடென மழலை உமிழ்ந்துகொண்டு அங்குமிங்குமாக ஆடி ஓடிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையை, மூன்று நாட்கள் வரையிலும் அழிசி, தன்னுடனேயே தங்க வைத்துக்கொண்டு விட்டார். அந்த மூன்று நாட்களை, அவர் மூன்று நாழிகைப் பொழுதாகவே நினைத்தார்! அவ்வாறு மதிக்கப்பட்ட அந்த மூன்று நாழிகையில், அவர் ஒரு புதிய மனிதராக உருமாறிக் கொண்டிருந்தார்.

வந்த வேலை முடிந்து, பெண் திரும்பிப் போகிறாள். பெற்ற வயிறு, குழந்தையைக் கொடு என்று

கேட்கிறது. மறுத்துரைக்கப் புலவருக்கு உரிமை இல்லை. தயங்குகிறார். ஆனால்?......

பொல்லாச் சிறுமி அவள்! புலவரை விட்டு வர மறுத்துவிட்டாள். அழுது அடம் பிடிக்கத் தொடங்கி விட்டாள்! வணிகர் உட்பட அனைவருக்குமே அது சங்கடமான ஒரு நிலைமையாகத்தா னிருந்தது! இறுதியாக, வணிகரே, தாய்க்குக் கூறிவிட்டார்! கொஞ்ச நாட்களுக்குக் குழந்தை, புலவரிடமே இருக் கட்டுமே என்று!

தாய், முதலில் அறைகுறையாக ஒப்புக்கொண்டு வாயில் வரையிலும் கடந்து போய்விட்டாள்! குழந்தை வளர்ப்புப்பற்றி எண்ணிக்கொண்டாளோ, என்னவோ! சென்றவள் திரும்பிவந்து "இக்குழந் தையை, புலவர் அவர்களுக்கு எனது பரிசாகவே தந்துவிடுகிறேன்!" என்று கூறிவிட்டுப் போய் விட்டாள்!

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட் டது. தனக்குக் கிடைத்த அரிய இரத்தினத்தை, ரெத்தினா! என்ற பெயராலேயே அழைத்து வரத் தொடங்கினார். காலம் உருள, சம்பவங்கள் உருள, ஏதேதோ உருண்டோடிக் கொண்டிருந்தன! இடையே வாழ்க்கையும் உருண்டுகொண்டிருந்தது!

அனுராதபுரத்து விருந்தினர் மாளிகைத் தோட் டத்தில், நிலவுப் பெண்ணின் எழில் கோலத்தில் தன்னை மறந்து ஈடுபட்டுக்கொண்டிருந்த கொல்லன் அழிசியின் எண்ணம் இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் பழைய நிகழ்ச்சியினை மெள்ள மனத் திரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது! ரெத்தினா வைப் பெற்றவளது முகத் தோற்றத்தை நினைவுக்குக் கொண்டுவர முயற்சி செய்தார்; முடியவில்லை. ஒன்று ரெத்தினாவின் தோற்றம் தெரியும்! அல்லது தனது துணைவியின் மஞ்சள் பொலியும் அழகு முகம் தெரியும்!

"இனி பயனில்லை"—என்ற சொற்களை உகுத்தன அழிசியின் உதடுகள். எந்த ஒன்றாலும் இனி தனக்கு ஒரு பயனும் இருக்கப்போவதில்லை; தானும் இந்த உலகத்துக்கு ஒரு பயனும் நல்கிவிடப் போவதில்லை என்று எண்ணிக் கொண்டார்.

இங்கே உள்ள நிலைமைகளைக் காணும்போது, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஒரு பெரும் போர் ஏற்படுவதை இனி எந்தச் சக்தியினாலும் தடுத்து நிறுத்தமுடியாது போலிருக்கிறது! இந்தச் சூழ்நிலையில், தான் அனுராதபுரத்தில் இருப்பதனால், தான் மற்றவர்களுக்கு ஒரு சுமையாகத் தான் இருக்க நேரிடும்; அதுவும், தனது உடல் சேரநாட்டில், சேரளனுக்கு அருகில் புதைக்கப்பட்டால், தமிழ்கூறு நல்லுலகில் விட்டு வந்த சில பாடல்களால் தான் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்க முடியும்! எனவே, ரெத்னாவை, மன்னரின் பொறுப்பில் விட்டுவிட்டு, நாடு திரும்புவதே நல்லது......என்று சிந்தித்து, திடமான முடிவை மேற்கொண்டு விட்டார்!

தனது முடிவை, உடனே மன்னரிடம் சொல்லி விட்டு, பொழுது விடிந்ததும் புறப்பட்டு விடவேண்டும் என்று நினைத்துக்கொண்டு எழுந்தார்.

தூரத்தில், ரெத்தினா, வண்ண மலர்களை கொய்து பூமியில், பூக்களால் கோலம் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார் புலவர்.

'ரெத்தினா!' என்று குரல் கொடுத்தார் ஒரு முறை! அந்த வயோதிகக் குரல், அந்த வாலிபக் காதுகளில் விழுந்ததோ என்னவோ! புலவரே, அவள் பூக்கோலம் போட்டுக் கொண்டிருந்த இடத்துக்குப் போனார்!

வண்ணப் பூக்களால், போட்டிருந்த கோலம், நிலவொளியில் சரியாகத் தெரியவில்லையானாலும், கோலத்தின் வடிவம் தெளிவாகத்தான் தெரிந்தது. மனம் லயித்து சில வினாடிகள் அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

சற்று அருகே இருந்த தன் ரெத்னாவின் வாலிப்பான தோற்றமும், இளமைக் கவர்ச்சியும், கச்சையணிந்திருந்ததால், அதன் இறுக்கம் தாங்காது வெளியே வந்துவிடத் துடித்துக் கொண்டிருப்பது போன்று புடைத்துக் கொண்டிருந்த கொங்கைகளும் அவற்றின் சுமை தாங்காது ஒடிந்துவிடுமோ என்று எண்ணத் தகும் அளவுள்ள சிற்றிடையும், அந்த இடையை வளைத்து ஒரு காலை மடக்கி அமர்ந்து கொண்டு கோலத்தை பூக்களால் எழுதிக்கொண்டிருந்த காட்சியும், வளர்ப்புத் தந்தையின் எண்ணத்தை எங்கோ இழுத்துச் சென்றன.

ஒரு முறை நிலாச் சோறுக்காக என்று மட்டுமல்லாது மனத்தை அழுத்திக் கொண்டிருந்த சுமையை ஏகாந்தமான ஒரு இடத்திலிருந்து அழுதுக் கரைக்க வேண்டுமென்பதற்காகவும் மனுச்சோழர், கொல்லன் அழிசியையும், ரெத்னாவையும் தேரிலேற்றிக்கொண்டு காவிரிப்புகும்பட்டினத்துக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்.

கடற்கரையை அடைந்ததுமே, வட்ட நிலா, கீழ் வானத்திலிருந்து கடலுள் மூழ்கி எழுந்து உலா புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

புலவரையும், ரெத்னுவையும் அங்கே தனியாக இருக்க விட்டுவிட்டு, வெகுதூரம் வரையில் மனனர் காலார நடந்து சென்று ஒரு பாறையில் அமர்ந்து கொண்டு நிலவுக் காட்சியில் மனதைப் பதித்துக் கொண்டிருந்தார்.

தனித்து விடப்பட்ட புலவர், தேரின் சக்கரத்தில் சாய்ந்துகொண்டு, கடலின் அலேஓசைக்கு எந்த இசை பொருந்தும் என்றுஆய்வு நடத்திக்கொண்டிருந்தார்.

சிறுமி ரெத்தினு, சற்று தூரத்தில் வளர்ந்திருந்த புன்னே மரங்களின் அடியில் சென்று தன் சிறிய பூவாடை வீசும் பாவாடை நிரம்ப புன்னே மலர்களேப் பொறுக்கி எடுத்துக்கொண்டு வந்து, கடற்கரை மணலே கைளால் சமப்படுத்தி, அந்தச் சமதரையில் புன்னேப் பூக்களே ஒவ்வொன்ருய் வைத்து விதிவிடங்கச் சோழ பெருமான் என்று அடுக்கிக்கொண்டிருந்தாள்.

சிறுவனுயிருந்த வீதிவிடங்கனும், சிறுமி ரெத்தி வும் ஒன்ருக இணேந்து விளேயாடிக் கொண்டிருந்த காலம் அது. அதனுல் தன் தோழன் பெயரை, தோழமை உணர்வோடு, தரையிலே முத்துப் பூக்க ளால் எழுதிக் கொண்டிருந்தாள் அவள்.

அலேகளின் பேரிரைச்சலுக்கு இசை கூட்ட முயன்று தோற்றுப் போய் வாழ்க்கையை அலேக்கு ஒப்பிட்டுவிட்டு, அந்த ஒப்புமை மனத்துடன் திரும் பிப் பார்க்கும்போது சிறுமி, ஆரூர் இளவரசனது முழுப் பெயரையும் எழுதி முடித்துவிட்டு, அருகே அமர்ந்து அதனேயே பார்த்துக்கொண்டிருந்தாள்.

தேர்க்காலில் சாய்ந்தபடியே அந்தக் காட்சி யினேக் கண்டு உள்ளம் பூரித்த புலவர், மனத்துள் எதையோ நினேந்தவராய் "நடக்கப்போகிறதா அது? என் ரெத்னுவுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்குமா?" என்று வாய்விட்டுச் சொல்லிவிட்டு, ரெத்தினுவின் அருகே வந்து அவளே வாரியெடுத்து முத்த மழை பொழிந்தார்!

அன்றைக்கு அவர் நினேத்ததுபோல, காலம் கனிந்துகொண்டுதான் இருந்தது, வீதிவிடங்கனின் இதயத்தில் ரெத்தினு குடியேறிக் கொண்டுதானிருந் தாள்! கொலு அமரவேண்டிய நாள் அணுகிக்கொண் டிருந்தபோதுதான் மனுச்சோழர் மறைந்தார். மன்னர் மறைந்தாலும், வீதி விடங்களின் இதயத் திலிருந்து ரெத்தினு மறைந்து விடவில்லே. ஆனுல் கட்டாயமாக மறந்து தீரவேண்டும் என்று வற்புறுத் தினர் அமைச்சர் பெருமக்கள். பட்டஞ்சூடிக்கொள்ள வேண்டிய பருவத்திலிருந்த காரணத்தால், அமைச்சர் களே மீறி விடங்கனுல் செயல்பட முடியவில்லே! அது மட்டுமல்ல; மன்னரது மறைவை, தானே சென்று எள்ளாளருக்குச் சொல்லவேண்டும் என்றும் கூறி விட்டனர்! உடன் ரெத்தினுவையும் அழைத்துச் செல் லுங்கள் என்று அன்று அவர்கள் வற்புறுத்தியதன் நோக்கம் புலனுகாமல் இல்லே. புரிந்து?

பூக்கொல்லேயில் அமர்ந்து பூக்கோலம் போட்டுக் கொண்டிருந்த ரெத்தினுவின் கோலத்தைக் கண்ட தும், அன்றைக்கு காவிரிப் புகும் பட்டினத்துக் காட்சிகளும், எண்ணிய எண்ணங்களும் நினேவுக்கு வந்து சேர்ந்தன! "எல்லாமே வீணுகிவிட்டது!" என்ற சொற்கள் தானுகவே உதிர்ந்து காற்றில் கலந்தன!

ரெத்தினுவின் அருகே வந்து கீழே குனிந்து அவளேத் தூக்கி நிறுத்தி மார்பில் அணேத்துக் கொண்டு, "ரெத்தினு! உன்னே விட்டுப் பிரியப்போகி றேனம்மா!" என்ருர் கரகரத்த ஆனுல் கம்மிய குரலோடு!

ரெத்தினுவுக்கு ஒன்றுமே புரியவில்லே. திடீரென்று தந்தைக்கு என்ன வந்துவிட்டது? ஏன் இப்படிப் பிரிவுபற்றிக் கூறுகிருர்? என்று எண்ணிக் கலங்கினுள்.

"அப்பா!" என்ருள் ரெத்தினு. அந்த அழைப்பை வெளியிட்ட குரலில்தான் எத்தனே எத்தனே பாவங் கள்! அதிலும் சோகம் குழைந்து வெளிவந்த அந்தச் சொற்களுக்குள்ளேதான் எவ்வளவு பொருள்கள் புதைந்திருந்தன!

"ரெத்தினு!" என்று மட்டுமே கூறினுர் புலவர். அந்தச் சொற்கள் சிதறி ஒலி பரவிப் பாயுமுன் அவரது கண்களில் நீர்த்திரையிட்டு விட்டது.

யார் என்ன பேசுவது என்பதறியாமல் சில வினுடிகளே மௌனத்தால் கொன்றனர். எப்படியும் பொழுது புலர்ந்துதானே ஆகவேண்டும்! புலவரே அமைதியைக் கலேத்து "மகளே! உன்னேப்பற்றி, இது வரையில் நீ அறியாத சில உண்மைகளேத் தெரிந்து கொள்ளவேண்டிய வேளே, நெருங்கிவிட்டது; கேட் டுக்கொள்ளம்மா!" என்ருர்.

புலவர் கூறியது கேட்டு அதிர்ச்சியடைந்து விட்டாள் ரெத்தினு. தன் வாழ்க்கையிலும், தான் அறிந்துகொள்ளவேண்டிய இரகசியங்களா? இது நாட்கள் வரையில் அவை மறைக்கப்பட்டிருந்தனவா! எண்ணிப் பார்க்கும்போது ரெத்தினுவுக்கு அதிர்ச்சி யுடன் கலந்த வியப்பு மேலோங்கியது.

"சீக்கிரமாகச் சொல்லுங்கள் அப்பா!" என்ருள் ரெத்தினு!



‘இதயங்களின வாழததுக்களுடன் சென்று வருகிறேன்’

உங்கள் அன்பான ஆசியுடன் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்கிறேன்.

"நான் இல்லாத நேரத்திலும் தமிழ் நாட்டின் அமைதியைக் கட்டிக் காக்கவேண்டும் என்று அனே வரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழர்களின் பண்பையும் தொடர்ந்து பேணிக் காக்கவேண்டும் என்று உங்களே அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

"நமது நாடு இப்போது மிகவும் நெருக்கடியான நிலேயில் இருக்கிறது; நாட்டின் பாதுகாப்புக்குத் தேவையான எல்லா உதவிகளேயும் நீங்கள் செய்வீர்க ளென நம்புகிறேன்.

"நான் வெளிநாடு சென்றுவர விடைகொடுக்கும் படி உங்கள் அனேவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

"நல்ல உள்ளங்களின் வாழ்த்துக்களுடன் விடை பெற்று மேலேநாடு சென்று திரும்புகிறேன்."

—முதலமைச்சர் கருணநிதி.

நேருவை நினைவோர்க்கு மட்டும்!

போர் வாழ்க்கையிலிருந்து மட்டும் அகற்றப்பட்டால் போதாது. மக்கள் நினைப்பிலிருந்தும், மனத்திலிருந்தும் கூட அகற்றப்பட வேண்டும்.

* * *

பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் சிறிய மனிதர்கள் நாம். ஆனால் பணி பெரியது என்பதனால் நம்மீதும் அதன் பெருமையில் ஒரு பகுதி படிந்துவிடுகிறது!

* * *

தம் நாட்டில் புத்தகங்களையும், இதழ்களையும் படிப்போர் தொகை மிகவும் குறைவு. இதற்குக் காரணம் படிப்பின்மையன்று; இங்கே கோடிக் கணக்கில் படித்தவர்கள் இருக்கிறார்கள்! ஆனால் படிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொண்டவர்களின் தொகைதான் குறைவு.

* * *

சினிமாவுக்குப் போகிறவர்கள், சினிமாவுக்காகச் செலவு செய்யும் பணத்தில் பத்தில் ஒரு பகுதியைப் புத்தகங்களுக்குச் செலவிட்டாலே, இந்தியாவில் ஏராளமான புத்தகங்களை விற்பனை செய்ய முடியும்.

* * *

மாணவர்கள் தத்தம் தாய்மொழி மூலமே கல்வி பயில வேண்டும்; அப்போதுதான் அவர்கள் உள்ளம் சிறந்த முறையில் வளர்ச்சி பெறும். ஆங்கிலம் தெரிந்தவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், ஆங்கிலம் அறியாதவர்களை அவர்கள் மதிக்கவும் மறுக்கிறார்கள்!

* * *

சமஸ்கிருதம் வழக்கொழிந்து நெடுங்காலமாகிவிட்டது. தென்னாட்டில் வழங்கிவந்த திராவிட மொழிகளான தமிழ் கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவை சமஸ்கிருதத்தைவிட மிகவும் பழமையானவை என்பது வெளிப்படை.

* * *

உலகம் மாறிக்கொண்டே இருக்கிறது. நேற்றைய தேற்று முன்தின உரிமைகள் இன்று பொருத்தமானதாகக் காணப்படுவதில்லை.

* * *

அறிஞன், தான் அறிந்தது எவ்வளவு குறைவானது என்பதை அறிவான். முட்டாள்தான் தான் எல்லாவற்றையும் அறிந்தவன்போல எண்ணிக்கொள்வான்.

* * *

சமயத்தின் பெயரால் பல அரிய செயல்கள் நடைபெற்றுள்ளன. எனினும், அதே சமயத்தின் பெயரால் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்; எல்லாவித குற்றங்களும் புரியப்பட்டுள்ளன!

* * *

பதவியும் உரிமையும் உடையவர்கள், மனதாரத் தாமே அவற்றைத் துறப்பதில்லை.

* * *

வன்முறையில் செல்லும் வழி தீமை நிறைந்தது; வன்முறை தலைதூக்கி இருக்கும் இடத்தில் சுதந்திரம் தங்குவதில்லை.

"சொல்லி விடுகிறேனம்மா!" என்று சொல்லி நீண்ட பெருமூச்சை இளையவிட்டு, சில விநாடிகள் மீண்டும் அமைதியாக இருந்து, தான் முதன்முதலாக சேரநாட்டைவிட்டு சோழநாடு புகுதற்கு மேற்கொண்ட பயணம் பற்றியும், இடையே கருவூரில் வணிகர் வீட்டில் தங்கி இருந்ததுபற்றியும், அங்கே ரெத்தினா தனக்குப் பரிசளிக்கப்பட்டது பற்றியும், அதுமுதல் தனது மகளாகவே அவள் வளர்ந்து விட்டதுபற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

தன் வாழ்க்கையில் இப்படிப்பட்ட ஒரு திருப்பமும் உண்டு என்பதுபற்றி கனவுகூட கண்டறியாத ரெத்தினா, "அப்படியானால் என் தந்தை யார்? அன்னையின் பெயரென்ன?" என்றாள் புலவரைப் பார்த்து.

"நான் அப்போதிருந்த நிலையில் அதனை அறிந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கவே இல்லை. பிறகு சில திங்கள்கள் கழித்து, கருவூர் வணிகருடன் தொடர்புகொண்டு, அதுபற்றி விசாரித்தறிய முயன்றேன். முயற்சியில் எனக்கு வெற்றி கிடைக்கவில்லை அம்மா!" என்றார் மிகுந்த வருத்தத்துடன்.

"தாய், தந்தையரின் பெயரைக்கூட அறிந்து கொள்ள முடியாத இந்த அனாதை, அரச குடும்பத்துக்கு ஆசைப்பட்டது அநீதி அல்லவா! அப்பா! அதனால்தான் நாடு கடத்துவதுபோல நம்மை இங்கே அனுப்பிவிட்டார்களா அப்பா?" என்றாள் கலங்கிச் சோர்ந்து.

"இல்லையம்மா! திருவாரூரின் தேரோடும் வீதியில், விடங்கன் தேரூர்ந்து கொண்டிருந்த அந்தச் சமயம், தேர்க்காலில் சிக்கிக்கொண்ட கன்று ஒன்று கொல்லப்பட்டதன் காரணமாக, நீதிகுலைந்துவிட்டது என்று கருதிய மனுச்சோழர், அக் குற்றத்துக்குத் தண்டனையாக, வீதிவிடங்கனையே தேர்க்காலில் கிடத்தி, தேர் செலுத்தி ஒரே மகனைக் கொன்றுவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்தார் என்றால், மகளே, அந்த மன்னர் நீதி, நிலைகுலையக் கூடாது என்பதிலே எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பது உனக்குத் தெரிகிறதா மகளே! அமைச்சர் பெருமக்களும், புலவர் பெருமக்களும், அரசரது அந்தச் செயலைத் தடுக்க எவ்வளவு பாடுபடவேண்டியிருந்தது என்பதையும் நீ அறிவாயே அம்மா! ஆரியர்கள் சிலர் தவிர, வேறு எவருமே, தேர்க்காலின் தீர்ப்புக்கு வீதிவிடங்கனைப் பலிகொடுக்க விரும்பவில்லையம்மா! ஏன்? சோழர் பரம்பரை மனுச்சோழருடன் மறைந்துவிடக் கூடாது என்பதற்காக! அவ்வாறு காப்பாற்றப்பட வேண்டிய பரம்பரை அம்மா அது! மனுமன்னர் எதிர்பாராமல் மறையாமல் இருந்திருந்தால் இதற்குள் நீ சோழ அரசியாகி இருப்பாய் என்பது எனக்குத் தெரியும்! தேர்க்காலுக்குப் பலிகொடுக்கக் கூடாது என்பதற்குக் கூறப்பட்ட காரணங்களைவிட பலமான காரணங்களைத்தான் கூறினார்கள் அமைச்சர்கள். காரணங்களை நான் மனதார ஏற்றுக்கொண்டேன் அம்மா! சாதி, இனப் பாகுபாடற்ற நமது சமுதாயத்தில் எல்லாருடைய உடலிலும் ஒரேவிதமான குருதிதான் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதோ, அந்தக் குருதி விளைக்கும் உணர்ச்சிகள் மாறுபாட்டுக்குரியவை என்பதோ எனக்குத் தெரியாததல்ல மகளே! கூறப்பட்ட காரணம், என்னோடு, மண்ணுக்குள் புதைந்து போகட்டும்! அது உனக்குத் தெரியவே வேண்டாம் ரெத்தினா! என்னைக் கட்டாயப்படுத்திக் கேட்காதே ரெத்தினா!" என்று கூறி நிறுத்தினார்.

தளர்ச்சி காரணமாக அவர் மூச்சு தடைப்பட்டு தடைப்பட்டு இழையோட ஆரம்பித்தது.

எதுவுமே புரியாது பிரமைபிடித்த நிலேயிலிருந்தாள் ரெத்தினு. நீர் அருவியாகக் கொட்டிக்கொண்டிருந்தது கண்களிலிருந்து.

மீண்டும், அங்கே வெகு நேரம் வரையில் அமைதி நிலவியது. பால் நிலவின் இனிய கிரணங்கள் இன்பமாகப் பாய்ந்து கொண்டிருந்தன! என்ருலும் அவர்களைப் பொறுத்தமட்டில் அது இனிய இரவாக எப்படி இருக்கும்?

"புலவர் பெருமானே!"—என்ற குரல் கேட்டு இருவருமே திகைத்துத் திரும்பினர். சற்றுத் தள்ளி, சோழதேவி தியாகவல்லி நின்றுகொண்டிருந்தார்.

மின் தாக்குதலுக்கு ஆளாகிய உணர்வோடு அவர்கள் இருவருமே எழுந்து வந்து அரசியாரின் முன்நின்று வணங்கி, அமரும்படிக் கூறினர்.

சோழதேவி அமர்ந்ததும், "தாங்கள் கூப்பிட்டனுப்பி இருந்தால், நாங்களே அங்கு வந்திருப்போமே!"—என்ருர் புலவர்.

"எங்களே வேருக நினைப்பதனுல்தானே, புலவர் பெருமான், அப்படிக் கூறுகிறீர்கள்?"—என்று கேட்டுவிட்டு, ரெத்தினுவைப் பார்த்து. "ஏன் ரெத்தினு, உன் அப்பா சொல்வது முறையா?" என்ருர் தியாகவல்லி தேவியார்.

"நீங்கள் தவருகக் கொள்ளக்கூடாது. உங்களுக்கு எவ்வளவோ கடமைகள் இருக்கக்கூடும். அதனுல்தான்..." ரெத்தினு முடிக்கவில்லே, சோழதேவி இடைமறித்து "அது கிடக்கட்டும்! புலவர் பெருமானே! நான் முக்கியமான ஒரு விஷயம் பற்றித் தங்களிடம் பேசவேண்டும் என்பதற்காகவே இங்கு வந்திருக்கிறேன்...பேசலா மல்லவா!" என்ருர்.

"இதனைச் செய்! அங்கே போ! என்று நீங்கள் உத்திரவு அல்லவா பிறப்பிக்க வேண்டும்! சிரத்தாலே செய்து முடிப்போமே!" என்ருள் ரெத்தினு, தந்தையை முந்திக்கொண்டு.

புன்முறுவல் பூத்த முகத்தை, செயற்கையால் உருவாக்கிக் கொண்டு, புலவர்} அவர்கள், "நீங்கள் எதைச் சொன்னுலும், எங்களால் முடிந்த அளவுக்கு நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறேம் தேவி"—என்ருர்.

"நல்லது புலவர் பெருமானே? அப்படியானுல் ரெத்தினுவை நீங்கள் எனக்குக் கொடுத்துவிட வேண்டும்! அவளைப் பற்றிய பொறுப்புக்களே என்னிடம் ஒப்படைத்துவிடவேண்டும்!" என்ருர் அரசியார்.

"இதைவிட எனக்கு ஒரு பெரும் பேறு உண்டா தேவி! நானே அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். என் தளர்ந்த உடலே, கேரள மன்னனுக்கு உரமாக்க வேண்டும் என்றே விரும்பிக் கொண்டிருக்கிறேன்!" என்ருர் புலவர் அழிசி.

ரெத்தினு மௌனமாக அமர்ந்துகொண்டிருந்தாள். புலவரும், சோழதேவியும் கொஞ்சநேரம் பொதுவிஷயங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு, "புலவர் பெருமான் அவர்களே, நீங்களும் வாருங்கள் அரண்மனைக்குப் போகலாம்!" என்று அழைப்பு விடுத்துக்கொண்டே, எழுந்தார் தேவியார்.

மூவரும் அரண்மனை வந்து சேர்ந்து, பேரரசர் எள்ளாளரைக் கண்டனர். புலவரையும், ரெத்தினுவையும் மகிழ்வுடன் வரவேற்ற அரசர், "எல்லா

சுவைத்ததைச் சொல்கிறேம்

31—10—71 காஞ்சி இதழில் "சோழமாதேவி" தொடர்கதை மிகவும் உணர்ச்சிபூர்வமாகவும் உத்வேகம் நிறைந்ததாகவும் அமைந்திருந்தது. தமிழர்களை "அன்பு" என்னும் ஆயுதம் ஒன்ருல் மட்டுமே வென்றிடமுடியும் என்பதை, தெளிவாகவும்—விளக்கமாகவும் திட்டமாகவும் நுட்பமாகவும், கூர்த்த மதியுடன் தீட்டியிருந்த பாங்கு என்னை மிகவும் கவர்ந்திழுத்தது! உண்மையிலேயே தொடர்கதை விறுவிறுப்பாக அமைந்து—ஆற்றெழுக்கு நடையில் செல்வது குறித்து வாசகர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிருர்கள்.

"அப்போலோவின் பேட்டி" கட்டுரையை ஒருமுறை அல்ல பன்முறை திரும்பத் திரும்ப சுவைத்துப் படித்தேன். கட்டுரை கருத்துக் கருவூலமாக மட்டுமல்ல—நகைச்சுவையும் அதில் பின்னிப் பிணைந்திருந்தது. இந்தக் கட்டுரை தொடர்ந்து வெளிவர வேண்டும். இது என் பேரவா!

பா. வரதன், கலவை

31—10—71 இதழில் சோழமாதேவி, ஒரு இலக்கியப் படைப்பு என்பதில் ஐயமில்லே. உணர்ச்சிப் பிழம்பாக அமைந்திருந்தது. தமிழர்களது பண்பு பற்றிய எடுத்துக்காட்டும், எடுத்துக்காட்ட கையாண்ட இடமும் நயமிக்கவை. இந்த உணர்ச்சி படிப்பவர்களுக்கு மட்டுமில்லாது, படைத்தவருக்கே ஏற்பட்டுவிட்டதனுல்தானே என்னவோ, சில சிறிய கருத்துப் பிழைகளைச் செய்துவிட்டிருக்கிருர். விகாரதேவி, இன்னும் நான்கு கிழமைகள் கழித்து விஜிதபுரம் போனுல் போதும் என்று கூறிவிட்டு, அடுத்து நோன்மதி கழிந்த மூன்ரும் நாள் போனுல் போதும் என்று மீண்டும் கூறி இருக்கிருர். திறப்புவிழாவுக்கு "அடுத்த மதித்திங்கள் ஏழாம் நாள்" என்று நாள் குறிப்பிடப்படுகிறது. இந்த இடைவெளியில்தானே விகாரதேவி விஜிதபுரம் செல்லவேண்டும்? விளக்கு வீர்களா?

எல். அறிவுஒளி, அதிராம்பட்டினம்

(இன்னும் நான்கு கிழமைகள் கழித்து போனுல் போதும்' என்பது தவருன தான். அதனை நீக்கிவிட்டால், ம றவை அனைத்தும் சரியே—ஆசிரியர்.

வானுலகில் இராசராசனைப் பேட்டி காணச் சென் மிஸ்டர் அப்போலோவுக்கு எங்கள் வாழ்த்துக்களை கூறுவதா? அனுதாபங்களைத் தெரிவிப்பதா? சந்திக்காம ஏமாற்றமடைந்ததற்கு எங்கள் அனுதாபமும், வெங்கா யைச் சந்தித்து ஆரிய இனத்தின் அருவெறுக்கத்தக் இயல்பைப்பற்றி அறிந்து, அந்த இயல்பு இராசராச யும் பழிவாங்கிற்று என்று எடுத்துக்காட்டி இருப்பதற்கு பாராட்டுக்கள்! அடுத்த கிழமை எந்த உலகத்திற்கு போவாரோ?

எம். ஜோசப், சென்னை-

வசதியும் தங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறதா?'' என்ருர். தலையசைத்தார் புலவர்.

புலவர் ஒரு இருக்கையிலும், சோழதேவியும் ரெத்தினவும் மற்ருெரு இருக்கையிலும் அமர்ந்தனர்! ரெத்தின மறுத்தும் பலவந்தமாக அமரச் செய்து கொண்டார் தேவியார்!

நால்வருமாக போர் மேகம் படரத் தொடங்கி இருக்கும் பொதுநிலைகள் பற்றி விவாதித்தனர். இந்த போர் அச்சுறுத்தல் உலகத்துக்கே பொதுவாக மாறிவிட்டிருக்கிறது என்றும், இது ஒரு நோயாகப் படர்ந்துகொண்டிருக்கிறது எனவும் கூறி, இந்தத் தொத்து நோய், முழுமையாக ஒழிக்கப்படும் நாள் வரவே வராதா என்ற தனது ஏக்கத்தை எடுத்துக் காட்டினுர் புலவர்.

புன்முறுவல் ஒன்றைச் சிந்தினுர் மன்னர். சிறிது நேரம் கழித்து, "மன்னர் அவர்கள் எனக்கு விடை தரவேண்டும்! நான் நாளை, ஊர் திரும்பலாம் என்றிருக்கிறேன்'' என்ருர்.

அவரை எவ்வளவோ தடுக்க முயன்ருர்கள் மன்னரும், தேவியாரும். ரெத்தினவும் கூடத்தான். என்ருலும், பிடிவாதமாக இருந்து விடைபெற்ருர் புலவர். ரெத்தினவைப் பற்றிய கவலையை முழுதும் விட்டுவிடும்படி இருவருமே கூறினுர்கள். ரெத்தின கண்ணீர் மழையில் நனைந்தாள். அரசரும் அரசியாரும் ஆறுதல் கூறினர்.

சோகமயமான சூழலுக் கிடையே திரும்பி நடந்தார் புலவர். மன்னர் அவரை அழைத்து, நாளை காலையில் வணிகக் கலம் ஒன்று செல்வதாகவும், அதிலேயே அவர் போகலாம் என்றும் கூறி, புலவரை நிறுத்திவிட்டு, பணியாளை அழைத்தார்.

பணியாள் வந்ததும், "புலவரை முத்துமுடியாரின் இருக்கைக்கு அழைத்துப் போய், நாளை வணிகக் கலத்துக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி சொன்னதாகச் சொல்?''—என்ருர்.

பணியாள் புலவருடன் புறப்பட்டான், முதலமைச்சரது மாளிகை நோக்கி. புலவரது எண்ணத்தில், திருவாரூர் அரண்மனையில் அமைச்சர்கள் சொன்ன அந்த இரகசியம் பற்றிய எண்ணங்கள் குதியாட்டம் போட்டன. யார் அந்த ரெத்தின? அமைச்சர்கள் கேட்கிருர்கள். புலவர் அவளது வரலாற்றைச் சொல்கிருர். ஒரு அமைச்சர் கருவூரில் சந்தித்த பெண்ணின் அடையாளத்தைப் பற்றிக் கூறுகிருர். ஒப்புக் கொள்கிருர் புலவர். மீண்டும் அமைச்சர்களிடையே குசு குசுப்பு இன்னெருு அமைச்சர் சொல்கிருர்: கருவூரில் சந்தித்த அந்தப் பெண், கருவூர் வணிகரது ஆசைக் கிழத்தி! அவளுக்கும் வணிகருக்கும் பிறந்ததே அந்தக் குழந்தை! இளம் வயதில் விதவையாகி, ஓடிப்போன தன் தங்கைதான் அவள். முதுமை, அவளை அணுகும் போது மீண்டும் தன் வீடு வந்தாள்! சமூகத் தூற்றலை அஞ்சி, நஞ்சுண்டு மடிந்து போனுள். சாகுமுன், கருவூரில், புலவருக்குத் தன் பெண்ணைப் பரிசு கொடுத்துவிட்டது பற்றிக் கூறினுள். ஆரூர் அரண்மனையில், ரெத்தினவைச் சந்தித்தபோதெல்லாம், தனது பாசம், எங்கே அந்த இரகசியத்தை வெளியிட்டு விடுமோ என்று அஞ்சியதாகக் கூறுகிருர்!

புலவர் நடுங்குகிருர்! ரெத்தின, அரச குலத்தின் இரத்தத்துடன் உறவு கொள்ளக்கூடாது என்கிருர்கள். அழிசியின் உடல் மேலும் நடுங்குகிறது. இலங்கை செல்லும் திட்டம் தயாராகிறது...!

"எல்லாம் முடிந்துவிட்டது...'' என்கிருர் புலவர் நடந்து கொண்டே! "என் கடமை அவ்வளவுதான்!'' என்கிருர், பணியாளிடம்! பணியாளும் புரிந்து கொண்டு புன்னகைக்கிருன். அதே நேரம், சோழதேவி, தன் அந்தப்புரத்துக்கு ரெத்தினவை அழைத்துச் சென்ருர். மன்னர் பல்வேறு யோசனைகளில் மூழ்கினுர்.

அந்தப்புரம் அடைந்த சோழதேவி, ரெத்தினவைத் தேற்றி, "ரெத்தின, நீ பொழுது விடிந்ததும், ரோகணரடாவுக்குப் போகப் போகிருய். உனக்குத் துணையாக இரு வீரர்கள் வருவார்கள். மகாகாமா அரண்மனை கண்ணுக்குத் தெரியும் வரையில் வீரர்கள் துணை இருக்கும். அங்கே ஒரு சத்திரத்தில் நீ நிறுத்தப்படுவாய், உன் வருகை குறித்து, அங்கே இப்போது இருந்து கொண்டிருக்கும் வேட்டரையனுக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. உன்னை அவன் இனங்கண்டு கொள்வான். வீரர்கள் திரும்பி விடுவர். நீ அங்கே என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி வேட்டரையன் விளக்குவான்! தயார்தானு?'' என்ருர்.

அரசியார் சொன்னதைக் கவனமாகக் கேட்டுக் கொண்ட ரெத்தின, "எனக்குப் பழக்கமில்லாத ஒற்றுப் பணிக்கு அனுப்புகிறீர்களா தேவி!'' என்ருள். "ஆமாம் மகளே! அரண்மனையிலேயே வளர்ந்த உனக்கு இது பெரிய காரியமல்ல; ஓரிரு நாட்களுக்குக் கஷ்டமாக இருக்கலாம். அப்புறம் தானுக எல்லாம் சரியாகிவிடும்!'' என்ருர்.

"இனி தாங்கள்தானே எனக்கு! உங்கள் கட்டளைகள் எதுவானுலும் இனிது நிறைவேற்றுவேன் தாயே!'' என்ருள் ரெத்தின!'' கட்டளை அல்ல மகளே இது—நீ சில கடமைகளைச் செய்யப்போகிருய்'' அவ்வளவுதான்! விரைவில் திரும்பிவிடலாம்!'' நிம்மதியாகப் படுத்திரு—என்று, தனியானதோர் அறைக்கு அழைத்துச் சென்று, பணியாளை அழைத்து படுக்கைக்கு ஏற்பாடுகளைச் செய்யப் பணித்துவிட்டுத் திரும்பினுர்.

மன்னரும் அதற்குள் மஞ்சத்துக்கு வந்திருந்தார். தனது ஏற்பாடுகள்பற்றி மன்னரிடம் விளக்கினுர் தேவி. அதுகேட்ட மன்னர், "நடைபெறப்போகும் போருக்கு உன்னையே தளபதியாக நியமித்து விடலாம் போலிருக்கிறது தேவி!'' என்ருர் கேலி ததும்ப!

புன்னகை மலர்ந்தது தேவியாரின் முகத்தில்! அதேபோது கண்ணிமைகள் சோர்ந்தன. மஞ்சத்தில் படுத்து விட்டார். மன்னரது மனம் மட்டும் ரெத்தினவைப்பற்றி எதை எதையோ எண்ணி உளைந்து கொண்டிருந்தது.

"எரிவதை இழுத்தால்...?"

— பொடியன் —

"யானை கொழுத்தால் தானே தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும்" என்றொரு பழமொழி தமிழில் உண்டு. வரலாற்றுக் காலந்தொட்டு இன்று வரைத் தமிழினம் இத்தகைய கொழுத்த யானையாக இருந்து வருகிறது என்பதை நாமறியாவிட்டாலும் உலகம் நன்கறியும்.

ஆரிய மொழியும் ஆரியக் கலையும், பண்பாடு பழக்க வழக்கங்களும் இன்று தமிழனின் தலைமீதேறிக் கிடக்கின்றன என்றால், அதற்குக் காரணம் கொழுத்த யானைத் தமிழனே!!

ஆமாம்!

தமிழன் கொழுத்த யானைதான். அதனால்தானே நாயும் நரியும், எலியும் ஈயும், வண்டும் நண்டும் நூற்றுக்கு மூன்றாக இருந்தும், 'தொண்ணூற்றின் தோலை உரிக்கும் விளையாட்டு நடைபெற்று வருகிறது. கடிக்கவரும் பாம்பின் கழுத்துக்கு மணிமாலை போடுவதும், நம்மை அழித்துவரும் ஆரிய ஏடுகளைக் காசு கொடுத்து வாங்குவதும் ஒன்றுதான் என்னும் அறிவு இன்னும் தமிழனுக்கு வரவில்லையே!! இந்தத் தமிழன் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் கொழுத்த யானை என்று கூறினால் குற்றமாகுமா?

எத்தனை ஆண்டுகளாக நம்மருந் தலைவர் தந்தை பெரியார் கூறி வருகிறார் 'பார்ப்பன ஏடுகளைத் தொடாதே' என்று. கேட்டோமா? கேட்டிருந்தால் கடந்த தேர்தலில் அய்யோ......அய்யோ,' என்று அலறி இருப்போமா?

உணர்ச்சிக் கட்டுரை!

'இப்படியா எழுதுவது? இப்படிஎழுதுவது தர்ம மாகுமா?' என்றெல்லாம் வாய்கிழியக் கத்தினோமே தவிர, ஈன ஏடுகளை, இனத் துரோகக் குப்பைகளை தொட மாட்டோம் என்று முடி வெடுத்தோமா? இல்லையே!

"எதைப் படித்தா என்ன சார். என்ன எழுதி யிருக்கான்னு தெரிஞ்சுக்க வேண்டாமோ? அதை வாங்காதே, இதை வாங்காதேன்னு அறிவுக்குத் தடை போடலாமா" என்றெல்லாம் இல்லாத நீதிகளைப் பேசினோமே தவிர, பொல்லாத ஏடுகளைத் தீயில் போடென்று கொதித்தோமா? இல்லையே!!

இது கொழுத்த யானையின் குணந்தானே!!

"நம்ம ஆள் எவன் சார் இப்படிப் பத்திரிகை நடத்துறான்" என்று நம்மை நாமே பழித்துக் கொண்டு எதிரியை வளர்த்து விட்ட பிறகு, 'குத்துகிறானே, குடைகிறானே' என்று குதிப்பதால் என்ன பயன்!!

எதிரியின் வாளை நாமே கூராக்கி விட்டு, இதயத்தைப் பிளக்க வருகின்றானே என்று ஒப்பாரி வைப்பதை இனியாவது நிறுத்த வேண்டும்.

அதனுடைய முன்னோடும் பணியாக கலைஞர் முதல்வர் அவர்களின் சேலம் கூட்டத்துச் சிங்கநாதத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சுருக்கமாகக் கலைஞர் கூறிய வரிகளுக்கு, விரிவுரை, பதவுரை, பொழிப்புரை எல்லாவற்றையும் நாமே எழுதிக்கொள்ள வேண்டும்.

தந்தை பெரியார் அவர்களுக்குச் சிம்மாசனம் அளித்த சேலத்து நிகழ்ச்சியில் கலைஞர் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

"மூட நம்பிக்கையைப் பரப்புகிறவர்களுக்கு, வைதீகத்தை, சனாதனத்தைப் பரப்புகிறவர்களுக்கு, அந்தக் குலத் தலைவர்களுக்கு ஒரு வெள்ளிக் காப்பு கொடுத்தால் கூட அந்தச் செய்தி எட்டு கலத்தில், கொட்டை எழுத்துக்களில் வெளிவரும். இந்த நிகழ்ச்சி ஈ. வே. ராவுக்கு வெள்ளிச் சிம்மாசனம்; முதலமைச்சர் கருணாநிதி அளித்தார்" என்று வரும் என முழக்கமிட்டுள்ளார் கலைஞர்.

'இனவுணர்வின் எழுச்சி' வரலாற்றைத் தமிழினம் எழுதத் தொடங்கி விட்டது என்பதற்கு இதைவிடச் சான்று வேறு தேவையில்லை!!

உண்மைதான்!! தந்தையின் இலட்சியம் அவரின் கண்ணிற்கு முன்னேயே நிறைவேறும் காலம் நெருங்கி வந்துகொண்டுதானுள்ளது.

இல்லாவிட்டால், தமிழன் விழித்துக் கொண்டான் என்பதை அறிந்த பிறகும், சேலத்து நிகழ்ச்சியை நடுத் தாளில், கண் படாத இடத்தில், தின மணியார் வெளியிட்டிருப்பாரா? அதுவும் எப்படி?

'வெள்ளிச் சிம்மாசனம்' என்று குறிப்பிட விரும்பாத 'ஈன இன மணியார்' 'வெள்ளி பூசிய சிம்மாசனம்' என்று குறிப்பிட்டுள்ளார். காரணம் சிறப்பிக்கப்பட்டவர் தந்தை பெரியாராயிற்றே!!

என்ன செய்வது?

கோயில் சொத்தில் உடம்பை வளர்க்கும் கூட்டத்தினராக இருந்திருந்தால், தங்கள் தலைவனுக்குத் தங்கத்தையே சிம்மாசனமாக்கித் தந்திருக்கும். ஏழைத் தமிழர்கள் தங்கள் இனத் தலைவனுக்கு வெள்ளி முலாம் கொடுத்து அளித்துள்ளார்கள்.

சிங்கத்துக்குச் சிம்மாசனம் கொடுத்தது நரிகளுக்குப் பிடிக்கவில்லை என்பதை நாடறியாதா?

இனத் தலைவருக்கு மக்கள் எடுக்கும் விழாவினை நான்கு வரிகளுக்குள் அடக்கி, வயிற்றெரிச்சலை வெளிப்படையாகச் சொல்லும் வீரம் தினமணித் திருக்கூட்டத்துக்கு எப்படி வந்தது?

எப்போதோ கேட்டிருக்க வேண்டிய கேள்வியை இப்போதாவது கேட்போம்!!

சேலத்து விழாவில் கலைஞர் இக்கேள்விக்கு விடையும் கண்டு நாட்டிற்கு அறிவித்துள்ளார்.

"எரிச்சல் ஏடுகளை வாங்காதிர்கள்! இருட்டடிப்பு ஏடுகளை வாங்காதிர்கள்!! இழிதகை ஏடுகளைத் தொடாதிர்கள்" என்று கலைஞர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலமறிந்துதான் கலைஞர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார். இலட்சக் கணக்கில் விற்பனையாகும் கொழுப்பால்தானே, நாம் கொடுக்கும் பணத்திமிரால்தானே இருட்டடிப்பு வேலைகளை ஈனர்கள் செய்கிறார்கள்.

தமிழன் பணத்தை வாங்கித் தமிழனையே அழிக்கும் கொடுமையைத் தடுத்து நிறுத்த இதுதானே வழி!!

தமிழர்கள் நடத்தும் ஏடுகளை வாங்கும் 'மாமா'க்களையும்; 'மாமி'களையும் பார்க்க முடியுமா?

அடுப்படியா ஆனந்தவிகடன்; தோட்டத்திலா துக்ளக்; கடையிலா கல்கி; தெருவிலா தினமணி; என்று தங்கள் ஏடுகளைத் தாங்களே வாங்கும்போது, நம் ஏடுகளை நம்மவர்கள் வாங்கக் கூடாதா?

"தரம் இல்லை; வேண்டும் வரம் இல்லை" என்றெல்லாம் 'வக்கணை' பேசும்வரைக் கொழுத்த யானைகளைத் தமிழகம் கண்டுகொண்டு தானிருக்கும்.

உயர்ந்த சாதிக்காரன் நடத்தும் ஏடுகளே உயர்ந்த சாதி ஏடுகள் என்னும் மயக்கம் இருக்கும் வரையில் இருட்டடிப்பு எத்தர்களின் இடுப்பொடிக்க முடியாது; எரிச்சல்காரர்களின் எதிர்ப்பை ஒடுக்க முடியாது.

கழகத் தலைவர் கலைஞரின் வேண்டுகோளை கட்டளையாக நாம் ஏற்க வேண்டும்!! அன்புக் கலைஞரின் வீரமுழக்கத்தை நம் வெற்றிக்கு வழிவகுக்கும் ஆணையாகக் கொள்ளவேண்டும். 'மஞ்சள்' ஏடாக இருந்தாலும் 'மாமாக்களின்' ஏடாக இல்லாதிருக்க வேண்டும் என்னும் மனம் வேண்டும்.

வண்ணப் படங்களுக்கும், அதிகப் பக்கங்களுக்கும், இனவுணர்வை அடகுவைக்கும் ஆசையை விட்டொழிக்க வேண்டும்.

நாளேடா நம்மவர் ஏடு; வார இதழா நம்மவர் இதழ்; மாத மலரா; நம்மவர் மலர் என்று வாங்கும் பழக்கம் வரலாற்றை உருவாக்கும் முதற்கோடு என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்தவன் நம்மவரின் ஏடுகளில் தீண்டாமை பார்க்கும் போது, நாம் அடுத்தவனின் ஏடுகளைத் 'தொடாமை' மேற்கொள்ள வேண்டும்.

தீட்டிய மரத்தில் கூர் பார்க்கும் தீயவர்களை ஒடுக்க இதுதான் வழி! இதுதான் நெறி!! ஆரியக் கொதிப்பை அடக்க, எரியாகப் பயன்படும் நம் ஆதரவு விறகை இழுத்துவிட வேண்டும். அவ்வளவுதான்! கொள்ளியை அணைத்தால் கொதிப்பது தானே அடங்கும்.

ஆமாம்!!

எரிவதை இழுப்போம்; கொதிப்பது தானே அடங்கிவிடும்.

தலைவனின் ஆணையைத் தலைமேற்கொள்ளும் தன்மானத் தோழர்களே! எரிவதை இழுத்து விடுங்கள்!! ஆரியக் கொதிப்பு தானே அடங்கிவிடும். ஃ

முகப்பு :

பெங்களூரில் அண்ணியார் பேச்சு!

பெருமைக்குரிய தலைவர் அவர்களே,

கருநாடக மாநில மக்களே!

தும்பிபோல் விரைந்து தொண்டு செய்யும் கழகத் தம்பிகளே!

அன்புக்கினிய தாய்மார்களே,

சீட்டுக்கவி போன்ற சின்னஞ் சிறுவர்களே! வீட்டு விளக்கின் வெளிச்சத்தைப் போன்றோரே! சூரியனைத் தாமரையும், சுண்ணும்புச் சந்திரனை நீருக்கு அழைக்க நினைக்கின்ற அல்லிகளும், வண்ணமாய் மூடி வணங்குகின்ற தன்மைபோல் எண்ணத்தைச் செலுத்தி இரு கரத்தை மொட்டாக்கி உங்களை வணங்குகிறேன்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக பெங்களூரில் எனக்குக் கொடுக்கும் மிகுந்த வரவேற்பைக் கண்டு உள்ளத்தில் பூரிப்பெய்கிறேன். 'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்' என்று வள்ளுவன் அன்னையினுடைய மகிழ்ச்சியின் எல்லையைச் சுட்டிக் காட்டுவான். அது தாய்க்கு மட்டும் கூறப்பட்ட மகிழ்ச்சியின் இலக்கணம் அன்று; அது தாரத்திற்கும் சேர்த்துதான். ஒரு பெண் தன் கணவனுடைய பீடும் பெருமையும் கண்டு உள்ளம் மகிழ்வாள்; அதைக் காட்டிலும் அவளுக்குச் சிறந்தது உலகில் எதுவும் இல்லை.

இங்கே மைசூர் மாநில முன்னாள் முதல்வர் மதிப்பிற்குரிய வீரேந்திர படில் அவர்கள் பொன்னுடை போர்த்தி என்னைக் கௌரவித்தார்கள். "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" என்ற வள்ளுவனின் வார்த்தையினை எடுத்து என் நன்றியறிதலை அவருக்குப் பரிசாக அளிக்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தமொன்று நடத்தி வெள்ளையனை வெளியேற்றி விடுதலை நாயகனாக விளங்கிய காந்தியடிகள் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர்கள்; வாழ்க்கையில் இன்பத்தைத் தவிர துன்பத்தைச் சுவைத்துப் பார்க்காதவர்கள். அலைகடலுக்கு அப்பால்—லண்டன் மாநகரில் தனது ஆணித்தரமான வாதங்களுக்கு உறுதி செய்யும் பாரிஸ்டர் படிப்பை முடித்தவர்கள்.

ஆனால் என்னுடைய கணவரோ ஏசுநாதர் மாட்டுக் கொட்டகையில் பிறந்ததுபோல் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்கள். தன்னுடைய இளமைக் காலத்தில் நபிகள் நாயகத்தைப் போல சமுதாயத்தில் புரட்சி செய்தவர்கள்; தன் இறுதிக் காலத்தில் போதி மரத்தடியில் இருக்கும் புத்தனாய் வாழ்ந்து போனவர்கள்.

தன்னைப்பற்றிக்கவலைப்படாமல், என்னைப் பற்றிக்கூட கவலைப்படாமல் நாட்டிற்கு வாழ்ந்தவர் என்னுடைய கணவர்.

தன்னைச் சுற்றிலும் வறுமை என்னும் முதலைகள் வாய் பிளந்து நிற்பினும் அச்சம் கொள்ளாதவர். தொல்லைகளை மிதித்து ஏறு போல் பீடுநடை போடும் ஆற்றல் அவருக்கு—வறுமையிலே பிறந்து வறுமையிலே வளர்ந்து முதுமையிலே பட்டம் ஏற்று எங்களை வெறுமையாக்கிப் போய் விட்ட என் கணவருக்கு—பிறந்த நாள் விழாவை மைசூர் மாநில மக்கள் கொண்டாடுவது குறித்து பெரிதும் மகிழ்கிறேன்.

என் கணவர் தேசியத் தலைவர் என்பதை உறுதி செய்யும் வகையில் மதிப்பிற்குரிய வீரேந்திர பாடிலை வைத்துப் பொன்னுடை போர்த்த ஏற்பாடு செய்தவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

என் கணவர் தமிழக மக்களுக்கு மட்டும் சொந்தமல்ல. கன்னடமும் களித் தெலுங்கும், கவின் மலையாளமும் பேசுகின்ற தென்னக மக்களுக்கே சொந்தம் என்ற உணர்வை உருவாக்கப் புறப்பட்டிருக்கும் இளம் நெஞ்சங்களுக்கு என் வாழ்த்துக்கள். ஃ

தியாகத்தில் பூத்த மலர்

புலவர் கோ. அண்ணுமலை

சிறப்புக் கட்டுரை!

ஆலயங்களைப் பாதுகாக்கப் போகிறோம்! ஆலயங்களின் நிருவாகத்தை அரசிடமிருந்து 'பிடுங்கிவிடப்போகிறோம்.' பிடுங்கி அதனை ஒரு 'சுதந்திரமான'—சமய முன்னோடிகள் அடங்கிய குழுவினரிடம் ஒப்படைக்கப் போகிறோம். அதற்கு வருகிற டிசம்பர் திங்கள் முதல் நாள்—கார்த்திகைத் தீபத்தன்று போராட்டம் நடத்தப் போகிறோம் என்று ஒரு கும்பல் ஆவேசக் கூச்சல் கிளம்பிக் கொண்டிருக்கிறது.

ஆவேசங் காரணமாக தன்னிலையும் அறிவும் இழந்து, நிறுவி நிலைநாட்ட இயலாத குற்றச்சாட்டுகளைத் தமிழக அரசின்மீது சுமத்துகிறது அந்தக் குறிப்பிட்ட கும்பல்.

இந்து ஆலயங்களின் ஆளுமை தனிப்பட்ட குழுவிடம் — சமய முன்னோடிகள் அடங்கிய குழுவிடம்—விடப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்காகப் போராட்டம் தொடங்க இருக்கிறார்கள். இதனைப் பற்றித் 'தியாக பூமி' என்னும் வார ஏடு ஒரு மலர் வெளியிட்டிருக்கிறது! இந்த மலரில் பலரும் கட்டுரைகள் தீட்டியிருக்கின்றார்கள்! என்ன எழுதுவது — எழுதுவதை எந்தெந்த ஆதாரங்களால் நிறுவிக் காட்டுவது என்கின்ற சிந்தனையே இல்லாமல் கோபாவேசமாகத் திட்டித் தீர்த்திருக்கின்றார்கள்.

'தி. மு. கழகம் நாத்திக வாதம் பேசிய கழகம், எனவே அவர்கள் ஆலய நிர்வாகத்தை நடத்திட முடியாது!'

'கபாலி கோயில் குளத்தைத் தூர்வாரினாலும் — ஓடாத திருவாரூர்த் தேரினை ஓடவிட்டாலும்—திருவரங்கக் கோயில் போன்ற கோயில்களின் திருப்பணி வேலையை நடத்தினாலும்' நாங்கள் நம்பமாட்டோம் நீங்கள்—தி. மு. க. - வினராகிய நீங்கள் — நாத்திகர்கள் ஆகவே ஆலய நிர்வாகம் உங்கள் கையில் இருத்தல் ஆகாது' என்கிறார்கள்.

'தமிழ் அர்ச்சனையால் கோயிலின் பெருமையே போய்விடும்!'—என்கிறார்கள்!

இராஜராஜன் சிலையைத்தான் கோயிலின் உள்ளே வைத்தால் கோயிலின் தூய்மைக்குப் பங்கம் வரும் என்கிறார்கள்.

இவையெல்லாம் அவர்கள் அள்ளி வீசும் பொருளற்ற குப்பைகளில் காணப்பட்ட பழைய—ஏற்கனவே பலமுறை தெளிவுடன் பதில் சொல்லப்பட்ட — குற்றச் சாட்டுகள்.

இந்தக் குற்றச்சாட்டுகளை நாம் பல்வேறு காரண காரியங்களுடன் மறுத்துரைத்து வந்திருக்கிறோம். இந்த முறை மறுக்கப் போவது நாமே எடுத்துவைக்கும் விளக்கமல்ல—அவர்களுடைய விளக்கங்களாலேயே அவர்களை மறுக்கின்றோம்!

தியாகபூமி—இந்து தேவாலயப் பாதுகாப்பு மலரில் ஒருவர் எழுதிய எழுத்தை மற்றொருவர் அதே மலரில் எழுதி மறுத்துவிடுகிறார். நமக்கு வேலையே வைக்கவில்லை! ஆவேசக் கூச்சல் கிளப்புகின்ற அந்தக் கூட்டத்தினரை நாம் இங்கே பணிவோடு கேட்டுக் கொள்வது, அந்த மலரை நாம் காட்டும் ஏணியின் உதவியோடு மீண்டும் படித்திட வேண்டும் என்பதுதான்!

மலரின் 11, 12-ஆம் பக்கங்களில் 'தொண்டன்' என்பார் தம் கட்டுரையில் ஒரு இடத்தில் எழுதுகிறார்!......'ஆகவே தமிழ் நாடு முழுவதும் ஹிந்து மக்கள் தி. மு. க. - வின் இப்போக்கினால் (தமிழ் அர்ச்சனை கொண்டுவந்த போக்கினால்) கொதிப்படைந்திருப்பதில் வியப்பில்லை'—என்று எழுதுகிறார்.

அதற்கு அடுத்த பக்கத்தில் வீ. ரங்கசாமித் தேவர் கட்டுரை. மலரின் 14-ஆம் பக்கத்தில் அவர் எழுதுகிறார்:

"ஜாதிப் பிரிவினைகளோடு கூட கட்சிப் பிரிவினைகள் வேறு. ஹிந்து என்ற உணர்ச்சி ஹிந்துக்களிடையே இல்லை. ஹிந்து மதத்தைப் பற்றி கேலி செய்யும் பொழுது ஹிந்துக்கள் அதைக் கேட்டுச் சிரித்துவிட்டுப் போகிறார்களே தவிர அவர்களுக்கு ஆத்திரம் ஏற்படுவதில்லை"

இந்து மதத்தைக் கேலி செய்தால்கூட சினம் வருவதில்லை என்கிறார் ஒருவர். இந்து மதக் கடவுள்களைத் தமிழ் மொழியால் அர்ச்சியுங்கள்—அதுகூட இல்லை—தமிழ் மொழியாலும் அவ்வாறு யாரேனும் விரும்பினால், அர்ச்சிக்கலாம் என்கின்ற அரசின் உத்திரவால் இந்து மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள் என்று 'அளக்கிறார்' ஒருவர்! அவரை அவருக்கு அருகில் உள்ளவரே மறுக்கிறார் என்பதை மட்டும் இங்கே சுட்டிக் காட்டிட விரும்புகிறோம்.

மலரின் 17-ஆம்பக்கத்தில் புரோகிதம் கே. ராமச்சந்திர ஐயங்கார் என்பார் 'யுகக் கணக்கில் அர்ச்சனைகள் சமஸ்கிருதத்தில்தான்!' என்று பயங்கர சத்தம் போடுகிறார். 'தற்போதுள்ள தமிழக அரசு ஹிந்து மதத்தையும் ஹிந்து தர்மானுஷ்டானங்களையும் அழிக்க முற்பட்டிருக்கிறது. தமிழர்ச்சனையைப் புகுத்துவதை ஹிந்துக்கள் அனைவரும் எதிர்த்தே தீருவர்' என்று கொக்கரிக்கிறார். ஆனால் அதே மலரின் 12ஆம் பக்கத்தில் 'தொண்டன்' என்பவர் கே. ராமச்சந்திர ஐயங்காரை ஓங்கித் தட்டுகிறார் ஒரு தட்டு! அப்படி என்ன தொண்டன் எழுதுகிறார்? கீழே படியுங்கள்!

"தமிழும் சம்ஸ்கிருதமும் இரு கண்களாகும். எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்ற வாதத்துக்கே இடமில்லை. ஒரு குழந்தையிடம் போய் உனக்கு அப்பாவைப் பிடிக்குமா அம்மாவைப் பிடிக்குமா? என்று கேட்கின்ற அசட்டுத்தனமான கேள்வியைப் போன்றதுதான் தமிழ்—சம்ஸ்க்ருத வாதம்."

உள்ளபடியே இந்த மலரைப் படித்தபோது இதனை எழுதுபவனுக்கு ஏற்பட்ட எண்ணம் என்ன தெரியுமா? "நாம் ஏதாவது ஒட்டியும் வெட்டியும் பேசும் பட்டி மன்றச் சொற்பொழிவுகளை மாறி மாறிப் படிக்கின்றோமோ?" என்ற எண்ணந்தான்!

அடுத்து, தியாகபூமி — இந்து தேவாலயப் பாதுகாப்பு மலரின் 25-ஆம் பக்கங்களில் எம். இராமஸ்வாமி, பி. ஏ., — செயலாளர், தமிழ் நாடு ஹிந்து தேவாலயப் பாதுகாப்புக் குழு-என்பார் எழுதுகிருர். மலரின் 26-ஆம் பக்கத்தில்:

"இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவிக்கு வந்தவுடனேயே ஆலய நிதிகளைச் சமய சார்பற்ற காரியங்களுக்கு உபயோகப்படுத்தலாமென்று சட்டத் திருத்தம் கொண்டு வந்தது. அதன் பயனுக ஆண்டுதோறும் ஏராளமான ஆலயப் பணங்கள் சமய சார்பற்ற ஏன், சமயவிரோத கல்விக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த ஆண்டிலேயே 57 - லட்ச ரூபாய் அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதைத் தவிர பிச்சைக்காரர் நிதிக்கும், தொழுநோய் நிலையங்களுக்கும் தாராளமாக அள்ளிக் கொடுக்கப்படுகிறது"

இராமஸ்வாமி என்பவர் இவ்வாறு அங்கலாய்க்கின்ருர். அதே மலரின் 21ஆம் பக்கத்தில் பேராசிரியர் பி. மகாதேவன் என்பவர் அவரை வெட்டிப் பேசுகிருர்:

"இந்தக் கோயில் ஸ்தாபனங்களை அடியோடு நாசம் செய்யாமல் அவைகளைச் சமூக முன்னேற்றத்திற்கு ஓரளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளும்படியான நடவடிக்கைகளை இப்போது சோவியத் ரஷியாவில் முக்கியமாகக் காண்கிருேம். தெய்வ நம்பிக்கை மூட நம்பிக்கை என்றும் மனிதர்களே தெய்வங்கள் என்றும் அவர்கள் சேவையே நம் தர்மம் என்றும் வற்புறுத்தி, அதே நேரத்தில் பழைய கோயில்களை ரஷியாவினும் மற்ற நாடுகளினும் சிறப்பாக இப்போது மாற்றியமைக்க முயலுகிருர்கள். மதச் சார்புக்குப் பதிலாக சமூக முன்னேற்றம், கலைவளர்ச்சி, கலை அபிவிருத்தி (அபிவிருத்தி வேறு, வளர்ச்சி வேறு போலிருக்கிறது!) சமூக சேவை (சமூக முன்னேற்றம் வேறே—சேவை வேறே) என்ற குறிக்கோள்களை இன்னும் கைவிடாமல் அவர்கள் பின்பற்றி வருவது குறிப்பிடத் தக்கது. இதிலிருந்து ஒரு முக்கியமான உண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டும். தெய்வ பக்தியோ மத நம்பிக்கையோ மனித முன்னேற்றத்திற்கு இடையூறனது அல்ல; ஆனல் அதற்கு அவசிய அவசியமானது என்பதுதான்.

அடுத்த இதழில்!

இந்து தேவாலயப் பாதுகாப்பு— என்பதன்பேரால் ஆரிய இனத்தவரும், தமிழினப்பகைவர்களும் எப்படியெல்லாம் கொலை வெறியைத் தூண்டுகிருர்கள் என்று ஆராய்கிருர் **"பொடியன்"**

களிப்போடு காத்திருங்கள்!

மதநம்பிக்கையும் மனித முன்னேற்றமும் ஒன்ருேடொன்று ஒத்துப் போகவேண்டியதுதான் என்பது பேராசிரியர். பி. மகாதேவனின் முடிவு. இராமஸ்வாமி அவர்கள் அதை மறுக்கிருர். மதக் காரியம் என்றுல் மதக் காரியம்தான்! மனித முன்னேற்றம் என்ருல் மனித முன்னேற்றம். இது அதற்கு உதவாது. அது இதற்கு உதவாது. உதவும்படி எந்த அரசாங்கமும் சட்டங்களில் திருத்தம் செய்திடக் கூடாது என்கிருர்.

சும்மா சொல்லப்படாது. தியாக பூமி என்ற பத்திரிகைக்காரர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இப்படி எதிர் எதிர் வாதங்களை வைத்து அருமையாகத்தான் தயாரித்திருக்கிருர்கள்—ஆலயப் பாதுகாப்பு—மலரை!

பேராசிரியர் பி. மகாதேவன் என்பவர் இன்னெரு கருத்தைத் தம் கட்டுரையில் எழுதுகிருர், மலரின் 22ஆம் பக்கத்தில்!

"முகலாய சாம்ராஜ்யத்தில்கூட அவைகளை (ஆலயங்களை) எவரும் ஆக்கிரமித்து துஷ்பிரயோகம்செய்ததாகச் சொல்வதற்கில்லை" அதாவது இஸ்லாம் மதத்தைத் தழுவி "வர்களின் ஆட்சியில்கூட துஷ்பிரயோகம் செய்யவில்லை என்கிருர். அபிவிருத்தி வேறு வளர்ச்சி வேறு என்று எண்ணும் இந்தப் பேராசிரியர் (பேருக்கு ஆசிரியரோ என்னவோ) கருத்தினை நம் தமிழறிஞர் கா. அப்பாதுரையாரை வைத்து மலர் வெளியிட்டவர்கள் அழகாக மறுத்திருக்கிருர்கள். அப்பாதுரையார் மலரின் 43-ஆம் பக்கத்தில் இவ்வாறு எழுதுகிருர்: (கி. பி. 1324 முதல் 1371 வரை) ஏறத்தாழ ஐம்பது வருடங்கள் மதுரையை முஸ்லிம்கள் ஆண்டனர். அப்பொழுதுதான்......... பாண்டி நாட்டுக் கோயில்கள் சீரழிந்தன. கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. நகரங்கள் சூறையாடப்பட்டன. பாண்டி நாட்டு வாணிகம் நின்றுவிட்டது!"

வெளியார் யாருக்கும் இவர்கள் மலரில் வேலை வைக்கவில்லை. வெகு அழகாகச் செய்திருக்கிருர்கள்.

அடுத்து வருபவர் 'சோ' என்கிற ராமசாமி ஐயர். அவர் தமது துக்ளக் பத்திரிகையில் எழுதிய தலையங்கத்தை எடுத்துப் போட்டிருக்கிருர்கள் மலரில்! அதில் 'சோ' கேட்கிருர்:

"தமிழில் அர்ச்சனை செய்தால் ஏற்காத ஆண்டவன் வட நாட்டிற்கே போகட்டுமென்று மக்கள் கூறுவார்கள்' என்று முதலமைச்சர் பேசியிருக்கிருரே, எந்த மக்கள் அப்படிக் கூறுவார்கள்?" "தமிழ் காட்டுமிராண்டி பாஷை" என்ற ஈ.வே.ரா.வையே வடநாட்டுக்குப் போகச்சொல்லாத மக்களா, ஆண்டவனைப் போகச் சொல்லப் போகிருர்கள். நமக்கு சந்தேகந்தான்"

எப்போதும் 'சோ' என்கிற ராமசாமி ஐயருக்குச் சந்தேகந்தான்! '71 தேர்தலில் சிண்டிகேட்வென்றுவிடும் என்று சந்தேகம்! தி.மு.க.—தோற்றுவிடும் என்று சந்தேகம். பின்னர், இந்திரா காங்கிரசும் தி.மு.க. வும் வென்ற பிறகு அது 'மையோ — பொய்யோ' என்று சந்தேகம்.

இப்போது தமிழ் மக்களைப்பற்றிச் சந்தேகம். சோ என்கிற ராமசாமி ஐயர், கேட்கும் கேள்வியிலேயே பதில் இருக்கிறது. தமிழைக் காட்டுமிராண்டிமொழி என்று சொல்லியும்கூட அவரை எங்கும் போகச்சொல்லாததிலிருந்து அவருக்கு மக்களிடம் எந்த அளவுக்குச் செல்வாக்கு இருக்கின்றது என்பது விளங்கும். அந்தச் செல்வாக்கே கடவுளர்களை, வடநாட்டுக்கு—தமிழ் அர்ச்சனையை ஏற்காவிட்டால் போகச் சொல்லும்! புரிகிறதா? சேலத்தில் செருப்பாலடிபட்டும் இந்த ராம—சாமிகளுக்குப் புத்தி வந்து வடநாட்டுக்குப் போகவில்லை-மக்கள் என்ன செய்வர்?

இன்னென்றும் ராமசாமி ஐயராகிய 'சோ' எழுதுகிருர். இறைவன் எந்த மொழியை ஏற்பான் என்ற ஆராய்ச்சியில் இறங்குபவன் இறைவனைத் தன் மனத்திலிருந்து

இறக்கிவிட்டான் என்பதுதான் அர்த்தம் என்று எழுதுகிறார். உண்மை! அதனால்தான் ஐயர்களையும் - பூசுரர்களையும்—பிராம்மண சிரேஷ்டர்களையும்— பிராம்மணோத்தமர்களையும் – ஆசார புருஷர்களையும் கேட்டுக் கொள்கிறோம். இறைவன் எந்த மொழியை ஏற்பான் என்று ஆராயாதீர்கள். இறைவன் எந்த மொழியையும் ஏற்பான். எனவே தமிழ்மொழியையும் ஏற்பான். ஆகவே அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு இறைவனை இறக்கிவிடாதீர்கள் என்கிறோம்.

'சோ' ஐயரை அறிமுகப் படுத்துவதுபோல மலர் வெளியிட்டவர்களே அவருக்கு மொழி விஷயம் 'அலர்ஜி' என்று சொல்லிவிட்டார்கள்! நாம் வேறு ஏன் அவரைக் குட்ட வேண்டும்?

'ஆண்டவனிடமிருந்தும், ஆலயத்திலிருந்தும் தமிழைப் பிரித்துப் பேசுவது கூடாது.' என்கிற கருத்தினை மறுப்பதை நோக்கமாகக் கொண்ட இவர்களின் மலரில்—58-ஆம் பக்கத்தில் பாரதிய ஜன சங்கத்தின் துணைத் தலைவராம் அ. ப. தாஸ் என்பவர் எழுதுகிறார். இப்படித் தங்கள் பக்கமே பந்தை அடித்துக் கோல் (Same side-goal) போடும் ஜன சங்கத் தலைவருக்கு நாமெல்லாம் நன்றியும் பாராட்டுதல்களும் தெரிவிக்க வேண்டும் அவர் எழுதுகிறார்!

"இன்று வாழ்ந்திருக்கும் அரசியல்வாதி எவரேனும் ஆண்டவனையும் ஆலயத்தையும் தமிழிலிருந்து பிரித்துப் பேச முற்பட்டால் அதுதான் இந்த நூற்றாண்டின் தலை சிறந்த தகிடுதத்தம் எனப்படுவது. தமிழகப் பெருமக்களைப் பச்சையாக ஏமாற்றுவது இந்தப் பேச்சுத்தான்"

மறுபடியும் படித்துப்பாருங்கள். தி. மு. க. தலைவர்களோ, ம. பொ. சியோ, தமிழில் அர்ச்சனை வேண்டும் என்போரோ பேசிய பேச்சிலிருந்து எடுத்த சில வரிகளைப் போல இல்லையா, துணை-ஜனசங்கத் தலைவர் எழுதியிருப்பது?

'ஆண்டவனையும் தமிழையும் பிரிப்பது இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த தகிடுதத்தம்' என்கிறார், தமிழக பாரதிய ஜன சங்கத் துணைத் தலைவர்!'

சே! ஜனசங்கத்துக் காரர்களை நாம் இதுவரை தவறாக அல்லவா எண்ணியிருந்தோம். இப்போதல்லவா தெரிகிறது, அவர்களும் தமிழ் அர்ச்சனையை வரவேற்கிறார்கள் என்பது!

இதற்கென்று தனியாக தியாக பூமிக்காரர்கள் ஒரு மலர் வெளியிட்டு ஒருவர் கருத்தை—அவர்களிலேயே இன்னொருவரை விட்டு மறுக்கச் சொல்லி அழகான கருத்தரங்கமே நடத்தியிருக்கிறார்களே!

கட்டாயமாக இவர்களுக்கு நாம் நன்றி செலுத்தியே ஆகவேண்டும். தமிழ் அர்ச்சனை ஏன்? ஆலய நிதியை வேறு நல்ல காரியங்களுக்குச் செலவிடுதல் எப்படிச் சரி? அரசாங்க உத்தரவு தமிழ் அர்ச்சனைபற்றிக் கூறுவதென்ன என்பனபோன்றவற்றை நாம் இவர்களுக்கு விளக்கவே வேண்டாம்! ஏற்கனவே அவர்களுக்கு விளங்கித்தான் இருக்கிறது. விளங்கியதால் தானே மலர் வெளியிட்டிருக்கிறார்கள் தியாகபூமிக்காரர்கள்! உண்மையிலே இவர்கள் தியாகபூமியைச் சேர்ந்தவர்கள்தான்! தங்களின் எதிர்க் கட்சிக்காகத் தாங்களே வாதிடும் வழக்கறிஞர்கள் வாழட்டும் என்று வாழ்த்துவோம். அவர்களின் தியாகத்தைப் போற்றுவோம்! ஃ

வண்ணமிகு படைப்புகள், வர்ணமய உலகம்.
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம். பட்டுகள் பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும். குர்தாக்கள், பெல் பாட்டம்கள்,
லுங்கிகள், சேலைகள்! உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்!!

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்.

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ்,
எழும்பூர், :: சென்னை - 8.

ஆவலைத் தூண்டிடும் அளவற்ற பரிசுகள் உங்களுக்காகவே!

பரிசுத் தொகை

ரூ. 20,00,000*

மொத்தப் பரிசுகள் 5331



இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு சீட்டின் விலை ஒரு ரூபாய் தான்.

குலுக்கல் நாள்: 30-11-1971

முதல் சிறப்புப் பரிசு

ரூ. 2,50,000

(பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்)

வழக்கமான பரிசுகள் (ஒவ்வொரு வரிசைககும்)

ஒரு இரண்டாவது பரிசு ரூ. 1,00,000

5 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ.	50,000
10 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ.	50,000
50 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. ஆயிரம்	ரூ.	50,000
1000 ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. நூறு	ரூ.	1,00,000
	ரூ.	3,50,000

செலவு ஒரு ரூபாய்

வரவோ பல லட்ச ரூபாய்

இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால்
உருவாகியுள்ள லட்சாதிபதிகள்: 258
வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2

*5 வரிசைகள் வெளியீட்டுக்குரியது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது